


உ
*சிவமயம்*
**ஆத்மஜோதி**
*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

மலர் 6: இதழ் 2
*விய வருடம்*
*சித்திரை - ஆனி*
*திருவள்ளுவர் ஆண்டு*
*2036*

**கௌரவ ஆசிரியர்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**ஆசிரியர் குழு**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. ச. திருநடராசா
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி
**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. திருமுறைச் செல்வம்
 - திருநிறைச் செல்வம்
4. அருட்சோதியாகிவிட்ட ஆத்மஜோதி
5. போகவிட்டுப் புறம்சொல்லித் திரியவேண்டாம்
6. சிவபுராணப்படன விதி
7. இந்திய திருத்தல யாத்திரை
.8. இந்து சமயப் பேரவைச் செய்திகள்
9. திருமுறை முற்றோதுகின்ற அடியார்களின் கருத்துக்கள்
10. Catechism on Saivaism
11. விய வருடப் பிரார்த்தனை
12. பிதிர் யஞ்ஞும்
13. அருட்கவியார் என் பார்வையில்
14. ஒல்லாந்து யாத்திரை
15. St. Thirunavukarasar
16. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை





# ஆசிரியர் தலையங்கம்

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை யூலாய் 28, 29, 30ஆம் திகதிகளில் துரந்தையிலும் (ரொறன்ரோவிலும்) ஆகஸ்ட் 05ம் திகதி மொன்றியலிலும் திருமுறை மகாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

கனடாவில் எத்தனையோ மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் திருமுறை மாநாடு நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். அவ்வகையில் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகின்றது.

கனடாவில் இந்து சமயப் பேரவை, அது தொடங்கப் பெற்ற காலத்திலிருந்தே - 1994 ஆம் ஆண்டிலிருந்தே - திருமுறைக்கு முதன்மை அளித்து வருகின்றது. கனடாவிலே பல ஆலயங்களில் திருமுறை ஓதலை ஒழுங்கு செய்து நடத்தியிருக்கின்றது.

இப்பொழுது ஸ்காபரோவிலுள்ள நல்லூர் கந்தன் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதலை முறையாக அவ்வப்போது நடத்தி, நிறைவு விழாக்களில் முற்றோதலிலே பங்குபற்றிய அடியார்களுக்குப் பரிசுகள் வழங்கியும் வருகின்றது. இதனால் நல்லூர்க் கந்தனுக்குத் ‘திருமுறைக் கந்தன்’ என்ற பெயரும் வரலாயிற்று.

சிறுவர்களையும் திருமுறைகளில் ஈடுபடுத்தும் நோக்குடன் அவ்வப்போது போட்டிகளை நடத்திப் பரிசுகளும் வழங்கி வருகின்றது. திருமுறை சார்ந்த பல நூல்களையும் அது வெளியிட்டுள்ளது.

திருமுறைகளின் அருமை பெருமைகளைச் சைவப் பெருமக்களுக்கு எடுத்துக் கூறுவது மாநாட்டின் நோக்கமாகும்.

மாநாட்டில் பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார், தாயகத்திலிருந்து திருவாளர்கள் சைவ சித்தாந்த கலாநிதி க. கணேசலிங்கம் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம், வாகீசகலாநிதி க. நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்

அவர்களின் வரவு நல்வரவாகவும் கனடியச் சைவத் திருவாளர்கள் மாநாட்டிற் பங்குபற்றிப் பயன்பெறவும் மாநாடு செவ்வனே நடைபெறவும் எல்லாம் வல்ல சிவபுரத்தரசை இறைஞ்சுகின்றோம்.

- வி. கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

### கைதடிப் பிள்ளையார்

அரசபதம் அதிகாரம் போனால் என்ன
ஆங்கார அடிபிடிகள் ஆனால் என்ன
உரிமைகளும் உடைமைகளும் இழந்தால் என்ன
ஊரூராய்ப் பெயர்ந்திடங்கள் அலைந்தால் என்ன
இருபொருளும் காட்டாத மலத்தில் ஏறி
எதிர்த்தவிறற் கயமுகனை இரித்த ஐயன்
கருதரிய கழலேத்தும் காதல் மிக்க
கைதடிமா பதிப்பிள்ளை காப்ப தாமே.

### நாவற்குழி சித்திவிநாயகர்

முல்லைமகன் முகங்கோணும் நெய்தற் பெண்ணை
முத்தமிட முனைதல்முறை யல்ல வென்று
மெல்லவலர் தூற்றியிடை மருதம் மேவும்
மேலோர்வாழ் நாவற்குழி வீற்றி ருந்தே
அல்லலறுத் தாட்சிபுரிந் தமைதி நாட்டும்
அருளாளர் மூலமலம் ஆட்ட மேனாள்
வெல்லவென வந்தவனை வென்ற சித்தி
விநாயகரை வணங்கிவினை வெல்லு வாமே.

### அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர்

விரிவான மருதநிலச் சூழல் எங்கும்
வேதநெறி வாழ்வியலின் மேன்மை தங்கும்
அரியாலை நீர்நொச்சித் தாழ்வில் அந்நாள்
அருட்சித்தி விநாயகர்க்குக் கோயில் கண்ட
அருளாளர் கனஞ்சேது ராயர் வாழ்க
அந்தணர்க ணேசையர் தொண்டும் வாழ்க
பொருளான பெருமானின் புகழும் வாழ்க
புடைசூழும் அடியாரும் பொலிந்தே வாழ்க!





### வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர்

தகவுறவே அன்புநெறி தழைத்து வாழ
தாங்கியுயர் சிவநீதி தரணி ஆள
பகையறவே பலவினமும் பண்பு பேணி
பரந்தமனப் பான்மையுடன் பழகி ஓங்க
திகழ்வுறவே செந்தமிழும் ஆட்சி செய்யச்
செழுங்கலைகள் தெய்வீகத் தென்றல் வீச
மிகுபுகழார் யாழ்ப்பாண வண்ணார் பண்ணை
விசுவேச விநாயகரை வேண்டு வாமே.

### எழுதுமட்டுவாள் மருதங்குள விநாயகர்

அளவற்ற ஆற்றலுடன் வந்து தித்தார்
அதிகாரந் தாய்தந்தை உவந்த ளித்தார்
தெளிவற்ற கயமுகனைச் செருவில் வென்றார்
திசையாவும் தொழுதேத்த அருளி நின்றார்
வளமிக்க வளர்ந்தோங்கும் எழுது மட்டு
வாள்மருதங் குளவிநா யகரைப் போற்றி
உளமார நாளெல்லாம் உருகி நின்றால்
ஒப்பாகி இருவினையும் உய்ய லாமே.

### சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர்

பெய்யாத மழைநன்கு பெய்ய வேண்டின்
பேசுமுயர் செல்வங்கள் பெருக வேண்டின்
நையாத உள்ளங்கள் நைய வேண்டின்
நமச்சிவா யம்நாளும் ஒலிக்க வேண்டின்
பொய்யான போய்மெய்யர் ஆக வேண்டின்
புவியோர்கள் பழிக்கின்ற பொல்லாங் கொன்றுஞ்
செய்யாத சரசாலை நுணுவில் சென்று
சிதம்பரவி நாயகரைச் சேவிப் பாமே.

- வி. கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைச்செல்வம் - திருநிறை செல்வம்

### ஆழ்கடலான்

'சாத்திரமும் தோத்திரமும் ஆனார் போலும்' - அப்பர்

திரு என்பதற்குச் செல்வம், திருமகள், சிவநெறி சிவபத்தி, சிவலோகம் மோக்கம், அழகு, தெய்வத்தன்மையெனப் பொருள்விரிப்பர். இங்கே தெய்வத்தன்மையென்று பொருள்படும். சைவத்தோடும், சைவசாதனங்களோடும், ஆலயம், சாத்திரம் தோத்திரம், இலக்கியங்களோடும், அனுபூதிச்செல்வர்களோடும் திருவென்ற பிரயோகம் வரக்காணலாம். ஒன்றன் சிறப்பை மேன்மைப்படுத்த இவ்வார்த்தை பயன்படக் காணலாம்.

மறைமொழி நிறைமொழி-மந்திரம் எனப் பொருள்தரும். முறைஅறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி (388 குறள் உரைபார்க்க) நிறை-கற்பு. முறைப்படுத்தப்பட்டது. வகுக்கப்பட்டது, வரிசையாக்கியது. சீரமைப்பது, ஒழுங்குபடுத்தப்பட்டது என்ற அர்த்தத்திலே இங்கே பயன்சொல்லலாம். சைவத்திருமுறைகள் பன்னிரண்டும், யாராலோ, யாவரின் தூண்டுதலாலோ-ஏதோவோர் பூமியிலோ வகுத்துத் தொகுத்து நிரற்ப்படுத்தப்பட்டமையான பன்னிருதிருமுறையென ஒருமையால் நிறைவு காண்கிறது எனலாம். செல்வம் நவநிதி, எட்டுச்செல்வம், பதினாறு செல்வம் என வகுக்கப்படும். இவற்றையும் கடந்து அருட்செல்வமென்று ஒரு செல்வம் வள்ளுவரால் சொல்லப்படுகிறது. அவர் செவிச்செல்வம் பற்றியும் வேறுபடுத்தியுள்ளார்.

'செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே' என்கிறார் திருஞானசம்பந்தர்

செல்வன்- சிவன், கழல் - திருவடிகள், இறைவன் கழலே திருவருள். இவ்வருட் செல்வம். செல்வத்துட் செல்வம், தலையாய செல்வாம். அவன்தாளை வணங்காத்தலை புன்தலை. செல்வாய செல்வந்தருவாய் நீயே என்பது அப்பர் திருவாக்கு. அருளிலார்க்கு அவ்வுலகமில்லை. எந்தை புகலூர் பாடின் சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையென்பது சுந்தரர் திருப்பாசுரம்.

ஆக அருளாளர்களால் இறைவன் அருளாணைப்படி எழுந்தனவே திருமுறைகள். அவை பன்னிருதிறத்தன. பெரும் பாலும் தோத்திர மாலைகளாயமைந்தன. இவற்றைத் தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் என ஆய்வாளர் பகுப்பாய்வு செய்துள்ளனர். தேவாரதிருவாசகம், திருஇசைப்பா, திருப்பல் லாண்டு (9 திருமுறைகள்) தோத்திரங்கள் எனப்படும். பத்தாந்





திருமுறையான திருமந்திரம் ஒரு தத்துவப் பனுவல் (சாத்திரம்). பதினோராந்திருமுறை 41 பிரபந்தங்களின் தொகுப்பு எனலாம். சேக்கிழார் அருளிய பக்திச் சுவை நனி சொட்டும் பெரிய புராணம் அடியார் பெருமையும், அக்கால சமயக்கோட்பாடும் பேசும் ஆய்வுப் பேரேடு ஆகும். ஆகப்பன்னிருதிருமுறைகள் சைவப்பெருங்குடி மக்களின் அரும்பெருஞ் செல்வமாம்.

முற்பகுதியை தேடியெடுத்தவர் நம்பியாண்டார்நம்பி என்றும், தேடி எடுப்பித்தவர் இராசஇராசச்சோழன் எனவும் இலக்கிய வரலாறுகள் கூறுகின்றன. இதில் அபிப்பிராய பேதங்களுமுண்டு. திருப்பதியம் என்ற வழக்காறு இராசராசனுக்குப் பின்னரே திருப் பதிகம் என வழங்கப்பட்டது. நம்பியாண்டார் தொகுத்த தேவாரத் திருப்பாடல்களைச் செப்பேடுகளில் எழுதிச் செப்பமுறக்காத்தவன் முதற்குலோத்துங்க சோழன் உடைய படைத்தலைவனான மணலிக்கூத்தன் கலிங்கராயன் என்பவனாவான். இச்செய்தியைத் தில்லைக்கல்வெட்டு ஒன்றினால் அறிகிறோம்.

சிதம்பரம் நடராசர் கோயில் பக்கம் 100 இசைப்பாடல்களான தேவாரத்துக்கு இசையமைத்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அருமைத்துணைவியாரின் வழிவந்தோரென நம்பப்படுகிறது. ஆளுடைபிள்ளையின் தேவாரம் 'தோடுடைய' என ஓங்காரத்திற் துவங்குகிறது. திருத்தொண்டர்புராணத்தின் இறுதிச் செய்யுளின் உலகெலாம் எனப்பூர்த்தியாகிறது. ஓங்காரத்தின் உட்பொருளே திருமுறையென்ற உண்மையை நாம் உணர வேண்டும். இவை யெல்லாம் இறையருளாற்பாடப்பட்டன. இதைத் தாயுமானவர் வாக்கின் மூலமே அறியலாம். இங்கே விரிவாகப்பேச ஆணை கிடைக்கவில்லை.

ஆதியிலே 102000 பாடல்கள் கிடைத்ததாகவும் அவை 787 பதிகங்களாய் அமைந்தன எனவும் அகத்தியர் தேவாரத்திரட்டில் நாவலர் குறிப்பிடுகிறார். பின்னர் வந்த விபரம் வருமாறு:

அப்பர் பெருமான் 49000 தேவாரங்கள். சம்பந்தர் 16000 பாடல்கள். சுந்தரர் 38000 தோத்திரப்பாக்கள். மொத்தம் 103000 பாடல்கள். நிகழ்வில் நூல் வடிவங் கொண்டவை

| | | |
|---|---|---|
| முதலாந்திருமுறை | 136 பதிகங்கள் | 1496 பாடல்கள் |
| இரண்டாம்திருமுறை | 122 பதிகங்கள் | 1331 பாடல்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மூன்றாந்திருமுறை | 126 பதிகங்கள் | 1358 பாடல்கள் |
| மொத்தம் | 384 பதிகங்கள் | 4185 பாடல்கள் |

| | | |
|---|---|---|
| நான்காந்திருமுறை | 113 பதிகங்கள் | 1070 பாடல்கள் |
| ஐந்தாந்திருமுறை | 100 பதிகங்கள் | 1015 பாடல்கள் |
| ஆறாந்திருமுறை | 99 பதிகங்கள் | 981 பாடல்கள் |
| மொத்தம் | 312 பதிகங்கள் | 3066 பாடல்கள் |

| | | |
|---|---|---|
| ஏழாந்திருமுறை | 100 பதிகங்கள் | 1026 பாடல்கள் |
| மொத்தம் | 100 பதிகங்கள் | 1026 பாடல்கள் |

| | | |
|---|---|---|
| மொத்தம் | 796 பதிகங்கள | 8250 பாடல்கள |

எட்டாம் திருமுறை திருவாசகம் பதிகம் 51 வாசகம்: 656
திருக்கோவையார் துறை 400 பாடல் 400
மொத்தம் 1056

ஒன்பதாம் திருமுறை

| | | |
|---|---|---|
| திருவிசைப்பா | பதிகஙகள் 29 | பாடல்கள் 300 |
| திருப்பல்லாண்டு | | பாடல்கள் 13 |

பாடல் ஆசிரியர்கள்: திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலயமுதனார், புருபோத்தமநம்பி, சேதிராயர்

பத்தாந் திருமுறை

| | |
|---|---|
| திருமூலர்: திருமந்திரம் | 3046 |
| மிகைப்பாடல் | 61 |
| மொத்தம் | 3107 |

பதினோராந்திருமுறை
திருமுகப்பாசுரம் உட்பட 41 பிரபந்தங்கள்
பாடியோர் பன்னிருவர்
பாடல் மொத்தம் 1416

பன்னிரண்டாந்திருமுறை பெரியபுராணம்
ஆசிரியர் சேக்கிழார் பாடல் தொகை 4286





பன்னிருதிருமுறை மொத்தப்பாடல் 18446 (ஒட்டுமொத்தமாக)

திருவிசைப்பாவில் திருவிடைகழிமுருகனைப் பற்றி 1 பதிகம் வருகிறது. பதினோராந்திருமுறையில் மூத்தபிள்ளையார் பற்றி 3 பிரபந்தங்கள் அமைந்துள்ளன. பதினோராந் திருமுறையிற் பத்துப்பாட்டிலொன்றான திருமுருகாற்றுப்படை இடம் பிடித்திருக்கிறது.

திருமந்திரத்தில் விநாயகர் பற்றி அறுமுகன் பற்றி வருவனவும் பின்பாடிச் சேர்க்கப்பட்டன எனக் கருதுபவர்களும் இருக்கிறார். விநாயகர் வணக்கம் வாதாபியில் இருந்து வந்ததாக முனைவர் அ.ச. ஞானசம்பந்தன் அடங்கன் முறைப்பதிப்பிற் குறிப்பிடுகிறார். எனவே பன்னிரு திருமுறை முழுதும் சிவவழிபாட்டையே அழுத்திப் பேசுகிறது. பரதெய்வவழிபாடு சம்பந்தரில் இருந்து நாவலர்வரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பஞ்சபுராணம் திருமுறையுள் இருந்தே தெரியப்பட்டுள்ளது. புராணம் பெரியபுராணத்தில் இருந்து ஓதவேண்டும்.

பதிகம் பாடியவர்களின் முன்னோடி காரைக்காலம்மையாரே. ஆதியிற் தேவார ஆசிரியர் அப்பரே. மந்திரங்களை மையமாக வைத்தே திருமுறைகள் வகுக்கப்பட்டன எனத் திருமுருக கிருபானந்தவாரியார் குறிப்பிடுகிறார். வெறுமனே உமிக்குத்திச் சலிப்பதோ அரைத்த மாவையரைப்பதோ பொருத்தமன்று. முதியவர் பாடிக்காட்ட இளைஞரும் சிறாரும் அவ்வடிச்சுவட்டிலே சாதனை செய்ய வேண்டும். பாடும் வட்டமும் பாடும் இடமும் விரிய வேண்டும். பிழையின்றி இசையோடு தூய சிந்தையுடன் பதிகங்களைப் பாராயணம் செய்ய வேண்டும். சிவதீட்சை பெற்றவரே திருமுறைப்பாராயணம் செய்ய அருகதையுடையோர்.

விழலுக்கு நீர்ப்பாய்ச்சி மாயமாட்டோம்.
வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம்
- பாரதி

பயன்பட்டவை:
பன்னிருதிருமுறைகள்
திருக்குறள்
சைவநீதி - கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சோதியாகிவிட்ட ஆத்மஜோதி

ஆத்மஜோதி முத்தையா அவர்கள்
எங்கள் அன்பு ஜோதி
அறிவாலே அறியும் வழிகாட்டிய
எங்கள் அறிவு ஜோதி
அன்பே சிவம் அறிவே துணையென
வாழ்ந்த எங்கள் அருமை சுவாமி
ஆத்ம ஜோதி முத்தையாவின் புகழ்
அகிலமெல்லாம் ஓங்குக! ஓங்குக!

சைவப் பிரசங்கங்கள் பல செய்து
சைவத்தை வளர்த்த சமய ஜோதி
மக்கள் பணிகள் பல செய்து
வாழ்ந்திட்ட எங்கள் மக்கள் ஜோதி
அணையாத சுடர் விளக்காய் - இன்று
ஆகிவிட்ட எங்கள் அமரஜோதி
அன்பினில் உயர்ந்த ஆத்மிக வள்ளல்
ஆத்ம ஜோதி வாழ்க! வாழ்க!

ஏழாலையெனும் நற்பதியில்
அவதரித்த எங்கள் ஆத்ம ஜோதி
சிறுவயது முதல் தெய்வீகப் பணிகளைச்
சிவன்பாதப் பணியாகச் செய்து - அவன்
திருவருளினைப் பெற்றிட்ட சிவஜோதி
சித்தந் தெய்வீக நெறிதனைக் கடைப்பிடித்து
இறைவன் திருவடி நீழலையடைந்த
ஆத்ம ஜோதியெனும் அருள் ஜோதியின்புகழ்
அகிலமெல்லாம் பரவுக! பரவுக!

கவிதை ஆக்கம்
யாழ் / குப்பிளான் ஊர்
செ. ரவிசாந்





# போகவிட்டுப் புறஞ் சொல்லித் திரிய வேண்டாம்

ஞானசுரபி நா. முத்தையா

“ஒருவர் உன்னிடம் வந்து போனபின்னர், அவரைப் பற்றி இழிவாகக் கூறி அலையாதே” என்பது பொருள். புறங் கூறாமை என்பது கோள் சொல்லாமை. தன்னலங்கருதி ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப்பற்றி இகழ்ந்து பேசுவது. இது வாக்கால் செய்யும் குற்றம். ஒருவன் தர்மம் என்ற இனத்தைச் சேராத செயல்களைச் செய்கிறவனானாலும் அவன் கோள் சொல்ல மாட்டான் என்பது மெச்சத்தக்கது. ஒருவனைக் காணாத இடத்தில் நழுவி அவனைப் பற்றிப் பொய்யான கோள்களைச் சொல்லி மகிழ்ச்சி அடைவது மற்றத் தர்மங்களில் தவறி தர்மமல்லாத காரியங்களைச் செய்வதைக் காட்டிலும் பெரிய பாவம்.

கோள் சொல்லிப் பொய்யனென்ற பெயரெடுத்துப் பிழைப்பு நடத்துவதைக் காட்டிலும் செத்துப் போவது தர்ம நூல்களில் சொல்லப்படுகிற நன்மையைத்தரும். காணாத இடத்தில் ஒருவனைப்பற்றி பொய்களைப் புனைந்துரைத்து கோள் சொன்னால்தான் சீவனம் செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்பட்டாலும் அப்படி உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்து போவது புண்ணியம் என்று கருதவேண்டும்.

கோள் கேட்கிறவன் இருக்குமட்டும் கோள் சொல்பவனும் இருக்கத்தான் செய்வான். கோள் சொல்பவனைத்திருத்துவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. யாரைப்பற்றி கோள் சொன்னானோ அவனையே கோள் சொன்னவன் அறியாமல் வரவழைத்து விடயத்தைப் பரகசியப்படுத்திவிட்டால் மேற்கொண்டு கோள் சொல்லுவதையே விட்டுவிடுவான். இதற்கும் திருந்தவில்லை என்றால் இரண்டு இடத்தில் முதுகைப் பதம்பார்த்துவிட்டால் திருந்திவிடுவான். கோளினால் எத்தனையோ குடும்பங்கள் சீரழிந்துள்ளன. கோள் சொல்பவர்கள் மீது எல்லோரும் கவனமாக இருக்க வேண்டும். கோள் சொல்பவர்களைக் கோள்கேட்பவர்கள் தட்டிக் கொடுப்பதினாலேதான் அவர்கள் தொழில் சரியாக நடைபெறுகிறது.

அடியேன் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில், என் மீது பொறாமை கொண்ட ஒரு ஆசிரியர் பன்னிரண்டு குற்றங்களைச் சோடித்து மேலதிகாரிகளுக்குத் தனது விலாசத்துடனேயே அறிவித்திருந்தார். மேலதிகாரி அடியேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு அறிந்தவராதலால் கந்தோருக்கு வருவதற்கு உங்களுக்கு எப்போ வசதி இருக்கும் என்று கேட்டு நேரத்தையும் திகதியையும் குறித்துக் கொண்டார். பெட்டீசம் போட்டவருக்கும் அறிவித்திருந்தார்.

அடியேன் கந்தோருக்குச் செல்லும்போது குறிப்பிட்ட ஆசிரியர் மேலதிகாரியுடன் பேசிக்கொண்டிருந்தார். அடியேனுக்கோ விடயம் இன்னதென்பது தெரியாது. அடியேனையும் அழைத்துப் பக்கத்திலே இருத்திக் கொண்டார். அடியேன் அந்த ஆசிரியருடன் மிகச்சாவதானமாக அவருடைய சுகநலன்களைப் பற்றி எல்லாம் உரையாடிக்கொண்டிருந்தேன். பதினைந்து நிமிடங்களுக்கு மேலாக நடந்த சம்பாஷணையை மேலதிகாரி அவர்களும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். சிறிதுநேரம் செல்ல ஆசிரியர் தண்ணீர்த்தாகமாக இருக்கிறது, தண்ணீர் பருகிவிட்டு வருகிறேன் என்று சென்றவர் இரண்டு மணித்தியாலமாக ஆளைக்காணவில்லை.

அடியேனை அவசரமாக அழைத்த காரணம் என்ன என்று கேட்டேன். அவர் ஒரு பெட்டீசத்தை எடுத்து இதனை வாசித்துப்பாரும் என்று தந்தார். அதனை வாசித்தபின்தான் விடயம் எல்லாம் அடியேனுக்குப் புரிந்தது. “இதன் முடிவு என்ன?” என்று கேட்டேன். உமது முகத்தைப் பார்க்க முடியாமலே எழுந்து சென்றவர் இன்னும் வரவில்லை. அவரைத் திருத்துவதற்காகவே உங்களையும் வரச் செய்தேன். அவருடைய பெட்டீசத்தை நம்பி நாங்கள் உங்களிடம் வந்திருந்தால் எங்கள் கதி என்னாவது? இப்படிப்பட்டவர்களாலேதான் மக்களுடைய அமைதியே கலைந்துவிடுகிறது என்று அந்த அதிகாரி அடியேனுக்கு ஆறுதல் கூறியதோடு இவர்களைப் பற்றி மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கையும் செய்தார்.

இரண்டு தினங்களின்பின் அந்த ஆசிரியரைத் திடீரெனச் சந்திக்க நேர்ந்தது. வழக்கம்போல புன்முறுவல் பூத்தேன். அவரும் நயவஞ்சமாகச் சிரித்துவிட்டு, ‘மேலதிகாரி உங்களுக்கு என்ன கூறினார்? எனக் கேட்டார். உங்களை வெகுநேரமாக எதிர் பார்த்திருந்து விட்டு வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணி விடக்கூடாது என்று கூறி உங்களுடன் ஏதாவது மனத்தாபமோ என்றுங் கேட்டார். நான் இல்லை என்றேன். நம்ப நட, நம்பி நடவாதே என்ற அறிவுரை கூறி அனுப்பினார் என்றேன். அவருடய முகத்தைப் பார்த்தேன். முகம் இருண்டுகொண்டு வந்தது. அவரே விடைபெற்றுக்கொண்டு சென்றுவிடடார். அதற்குப்பின் அடியேனை





அவர் நேருக்கு நேராகச் சந்திக்க விரும்பவில்லை. தீங்கினர் தங்கண்ணில் தெரியாத தூரத்தில் நீங்குவதே நல்ல நெறி என்பதை மனதுட் கொண்டு அடியேனும் அவர் பார்வையிலிருந்து விலகி நடந்து கொண்டேன்.

ஒருவனுக்கு முன்னால் நின்று தாட்சண்யம் இல்லாமல் பேசிவிட்டாலுங் குற்றமில்லை. ஆனால் அவன் உனக்கு முன்னால் இல்லாதபோது பின்னாலுண்டாகும் தீங்குகளை நினைத்துப்பார்க்காமல் கோள் சொல்லக்கூடாது. பின்னால் வரக்கூடிய தீங்கு என்பது யாரைப்பற்றிக் கோள் சொல்லப்படுகிறதோ அவருக்கு வருகிற தீங்குமட்டுமல்ல, கோள் சொல்லுகிறவனுக்கே பின்னால் வரக்கூடிய தீங்குகளைப் பற்றியும் ஆகும்.

ஒருவன் நல்லது சொல்லும் எண்ணம் உள்ளவன் அல்ல என்பதை கோள் சொல்லுகின்ற அற்பத்தனமே காட்டிவிடும். ஒருவன் இன்னொருவனிடத்திற்குச் சென்று அவனுக்கு நல்லது சொல்ல வந்தவன் போல, அங்கில்லாத வேறு ஒருவனைப்பற்றிக் கோள் சொல்லுகின்ற அவனுடைய அற்பத்தனமே அவன் நல்லது சொல்ல வந்த எண்ணமுள்ளவன் அல்ல என்பதைக் காட்டிவிடும். அதனால் இவனுக்கே தீமை உண்டாகும்

இன்னொருவன் மேல் பழி சுமத்தக் கோள் சொல்லுகிறவன், தான் யாரிடத்தில் கோள் சொல்கிறானோ அவன், தன்மேல் கோள் சொல்லும் குற்றம் நினைப்பானே என்றதைத் தெரிந்து பேசவேண்டும். கோள் சொல்லுகிறவர்கள் மிகவும் பொல்லாதவர்கள். கோள் சொல்லுகிறவர்கள் வேற்றுமை உண்டாகும்படி பேசி மனமொத்த நண்பர்களையும் பிரிந்துபோகும்படி செய்துவிடுவார்கள். மகிழ்ச்சி உண்டாக்கும் நல்லவார்த்தைகளைச் சொல்லி நட்புண்டாக்குவது அவர்களுக்குத் தெரியவே தெரியாது.

நெருங்கிய நண்பர்களுக்குள்ளேயும் ஒருவர் குற்றத்தை ஒருவரிடம் தனித்தனியே இல்லாத இடத்தில் பேசி, கோள் சொல்லும் இனமாகிய இவர்கள், ஏற்கெனவே பகைமை உள்ளவர்களுக்கிடையே என்ன செய்ய மாட்டார்கள்? புறங்கூறுவோர் பலர் அறியப் பரப்ப மாட்டார்கள். அவாக்ள் யாரும் அறியாதபடி ஒருவனிடத்தில் இன்னொருவனைப் பற்றி மறைவில் பேசுகின்றவர்கள் கோள் சொல்லிப்பகைமையை வளர்த்துக் கொடுமை விளைவிக்கிற இவர்களை இந்த உலகம் ஏன் சுமந்து கொண்டிருக்கிறதோ? ஒருவன் இல்லாத சமயம் பார்த்து அவனைப்பற்றிக் கோள் சொல்லுகிறவனை பூமியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய கடமை என்று கருதிச் சுமந்து கொண்டிருக்கிறது. “அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல்” என்ற படி தன்னை வெட்டிக் குழிதோண்டுகிறவர்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறது பூமி. கோள் சொல்லுகிறவர்களையும் தாங்குவது அதன் தர்மம் போலும்.

உலகத்தில் பல துன்பங்கள் கோள் சொல்வதால்தான் உண்டாகின்றன. கோள் சொல்லுகிறவன் உண்மையானதாகவோ, கற்பனையாகவோ பிறர்மேல் குற்றம் சொல்லித்தான் கோள் மூட்ட வேண்டும். அப்படிப் பிறர்மேல் குற்றம் சொல்லுகிற அவன், தான்செய்யும் குற்றத்தை உணர்வானாகில், மனிதருக்குள் ஒருவருக்கொருவர் துன்பம் செய்யவே காரணம் இருக்காது. மேலும் ஒவ்வொரு மனிதனும் பிறருடைய குற்றங்களைப் பற்றிக் கோள் சொல்வதற்குக் காது கொடுக்கும்போது தன் குற்றங்களை உணர்வானாகில் கோள் சொல்லுவதும் இருக்காது. அதனால் வரும் துன்பங்களும் அழியும்.

சுக்கில வாது தேசத்தின் அரசருக்கு நான்கு புதல்வர்கள். அவர்களில் மூத்த புதல்வர் இருவர் அகத்தியரைச் சந்தித்தனர். “பெருமானே! தாங்கள் எந்தத் தெய்வத்தை வணங்குகிறீர்கள்?” என்று அகத்தியரை அரசிளங்குமரர்கள் கேட்டனர்.

“தெய்வ சிரேட்டராகிய முருகனைத்தான் வணங்குகிறேன்” என்றார் குறுமுனி. “தவமுனியே! மூவுலகிலும் அதிகத் தவம் புரிந்தவர்யார்? என்று இளவரசர்கள் கேட்டனர். “எப்போதும் முத்தியின்பம் அனுபவிப்பவரே பெருந்தவம் புரிந்தவர்.”

(தொடரும்)

## செல்லத்துரை சுவாமி சிவஜோதியில் கலந்தார்

சிவயோகசுவாமிகளின் உத்தமசீடரும், யாழ்ப்பாணம், செங்கலடி சிவதொண்டர் நிலையத்தலைவருமாகிய செல்லத்துரை சுவாமிகள் 12-04-2006 புதன்கிழமை அத்த நட்சத்திரத்தில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார். அன்னாரின் பிரிவுக்கு இந்துசமயப் பேரவையும், பேரவையின் திருக்கூட்டத்தினரும், ஆத்மஜோதி பத்திரிகை குழுவும் தன் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.







# சிவபுராணபடன விதி

பக்கீர்சாமி லெட்சுமணன்

(யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் விபரிக்கப்பட்டுள்ள புராணபடன விதிகளின் சில பகுதிகளை இங்கு வாழ்கின்ற சைவசமய ஆசார சீலர்கள் பலரும் மீளப்படித்துப் பயனடைய வேண்டும் என்ற காரணமாக யாழ். நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பழைய மாணவர் திரு. பக்கீர்சாமி லெட்சுமணன் தொகுத்தளித்தவை.)

தேச மாற்றங்கள், பருவகால மாற்றங்கள் காரணமாக நாவலர் ஐயா அவர்களது விதிமுறைகளை முற்றுமுழுதாகக் கடைப்பிடிக்க முடியாதெனினும் இயன்றளவு சைவ ஆகம விதிகளை கைக் கொண்டு மனநிறைவுடன் தமிழுஞ் சைவமும் ஓங்கி உயர அயராது உழைப்போமாக. திருமுறைகளை ஓதிப் பயனுறவும் இவ்விதி முறைகள் உகந்தனவாகும்.

அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற் கடவுள் சிவபெருமான் எமது கடவுள். முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமானை வேதசிவாகம விதிப்படி மெய்யான அன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும் சிவனடியார்கள் என்றும் அழைக்கப் படுவார்கள். இவர்களுக்கான பொதுவிலக்கணங்களாவன கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, மதுவருந்தாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந்நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

இதைப்போலவே புறத்திலக்கணங்கள் பத்து உள. அவையாவன விபூதி, உருத்திராக்கம் என்னுஞ் சிவசின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடுதல், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவனைப் பூசைசெய்தல், சிவதருமங் களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலயதரிசனஞ் செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதி, உருத்திராக்கம் தரித்தல் முதலாம் புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும் கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணமாகும். ஆதலால், சைவ சமயிகள் யாவரும் சிவபுராணங் கேட்டல் வேண்டப்படுவதாகும். 'கற்றவை கற்றபின் அதற்குத்தக நிற்றல்' சாலவுஞ் சிறந்த கோட்பாடாகும்.

புராணங்கள் பதினெட்டு அவை பிரமபுராணம் தொடக்கம் பிரமாண்ட புராணம் ஈறானவைகளாம். அவற்றுள், சைவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராக புராணம், வாமன புராணம், மற்ச புராணம், கூர்ம புராணம், பிரமாண்ட புராணம் என்னும் பத்தும் சிவபுராணங்கள். சிவபுராணங்கள் பத்தும் மிக உயர்ந்தவனவாகும். எனவே சிவனடியார்கள் சிவபுராணங்களையே விதிப்படி மெய்யன்போடு கேட்க வேண்டும். படிக்க வேண்டும்.

சிவபுராணங்களைப் படித்துப் பொருள் சொல்லுதற்கு உரிய இடங்களாவன தேவாலயம். திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தவனம், யாகசாலை முதலிய சுத்ததானங்களாம்.

சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுவதற்கு அதிகாரிகளாவர் உடற்குற்றங்களில்லாதவராய், நல்லொழுக்கமுடயவராய், நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கணநூலிற் பயின்றவராய். நீதி நூல்களையும் சைவநூல்களையும் ஓதியுணர்ந்தவராய், சந்தியா வந்தனம் சிவபூசை முதலிய நித்திய கருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையுடன் செய்பவராயுள்ளவர்.

சிவபுராணஞ் சுபதினத்திற் சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்குந் தினத்திலும், முடிக்குந் தினத்திலும் சிவபுராண மண்டபம் நன்கு அலங்கரிக்கப்படல் வேண்டும். புராணிகர் சிவபுராணம் புத்தகத்தை பீடத்தின்மீது வைத்து சந்தனம் புட்பம் தூபம் தீபம் முதலியவற்றால் பூசைசெய்து நமஸ்காரம் பண்ணி, ஆசனத்திருந்து புராணம் போதித்தல் வேண்டும். அவர் அங்கே யாரையும் அஞ்சலி செய்தல் ஆகாது.

சிவபுராணங் கேட்போர் நாடோறும் நீராடி தோய்த்துலர்ந்த ஆடை தரித்து ஆசாரசீலராய், சித்திரப்பாவைபோல அசைவற மௌனமாயிருந்து, மெய்யன்புடன் கேட்டுப்பயனுற வேண்டும்.

நாடோறும் புராணந் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் காப்புச்





செய்ய வேண்டும். காப்புக்கு முன்னும் பின்னும், "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும்போது யாவரும் கும்பிட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்.

புராணம் வாசிப்பவர் சபையார் யாவருங் கேட்கும்பொருட்டு தெளிவு பெற வாசித்தல் வேண்டும். இலக்கணப் பிழை யில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையா இடங்களில் விரிவாகவும் பொருள் சொல்லல் வேண்டும்.

புராணம் படிக்குஞ் சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், அன்பின்றிக் கேட்போரும், சிரிப்போரும் இடையில் எழுந்து பிற கருமத்திலே செல்வோரும் பாவிகளாவர். புராணம் முடிந்தபின் புராணத்திருமுறைகளையும் போதகரையும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதிவலஞ் செய்வித்தல் வேண்டும். புராணம் முடிந்த காலத்திலும் ஆரம்ப காலத்திலும், இடையிலும் சிவனடியார்களுக்கு அன்னதானஞ் செய்தல் வேண்டும்.

சிரத்தையோடு சிவபுராணப் புத்தகத்தை எழுதிச் சிவனடியார்களுக்குக் கொடுத்தவரும், எழுதித் தம்வீட்டில் வைத்துப் பூசைசெய்தவரும், சிவபுராணத்தை வாசித்தவரும், அதற்குப் பொருள் சொன்னவரும், அதனைக் கேட்டவரும் சிவபதத்தை அடைவர்.

இறைவன், வினைவயப்பட்டுத் துன்பப்படும் நாம் அனைவரும், திருந்தி உய்யும்பொருட்டு, அருளாளர்களை இப் பூவுலகுக்கு அனுப்பி, அவர்கள் வாயிலாக நமக்குத் தன் அருட்பாடுகளைச் செய்துள்ளான். அருளாளர்களை அதிட்டித்து நின்று, இறைவனே திருவாய் மலர்ந்தருளிய சொற்களே திருமுறைகளில் உள்ளன. திருமுறைகளில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மந்திர ஆற்றலை உடையது. திருமுறைகளை நாம் பாராயணஞ் செய்யும்போது, அதில் உள்ள மந்திர ஆற்றல், நமது உயிரில் கலந்து, நமது அறியாமையைப் போக்கும் திறன் உடையது. இவ்வுண்மையை,

"பொறிநீடு அரவன், புனைபாடல் வல்லார்க்கு
அறும்நீடு அவலம் அறும் பிறப்புத்தானே!" என்னும் சம்பந்த சுவாமிகள் திருக்கடைக்காப்புவரிகள் வலியுறுத்துகின்றன.

வாழ்க தமிழ், வளர்க சைவம்!
வாழ்க சீர் அடியார் கூட்டம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய திருத்தல யாத்திரை

செ. சோமசுந்தரம்
பொருளாளர், இந்து சமயப் பேரவை

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினார்க்கு
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'
என்கிறார் தாயுமானவர்.

தாம்பரம் சென்றடைந்த நாம் இப்புண்ணிய பூமியில் கால் பதிக்கவைத்த பரம்பொருளை வணங்கினோம். எம்முடைய இந்த மனித வாழ்வு அழியும் காலமும் தெரியாது; இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்பதும் தெரியாது. அதனால் கிடைத்தற்கரிய மானிட சென்மத்தை எமக்களித்த பரம்பொருளை தரிசிக்க அவன் அன்றி அணுவும் அசையாது என்ற தத்துவத்தை உணர்ந்திடும் வடிவம் கொண்ட நடராசரையே முதலில் தரிசிக்க விரும்பி தாம்பரம் அடைந்த அடுத்தநாட்காலையே, முன்னரே ஒழுங்கு செய்திருந்த வாகனத்தில் சிதம்பரம் நோக்கிப் புறப்பட்டோம்.

தமிழ் நாட்டில் உள்ள அருந்திருத் தலங்களைத் தேடிச் செல்லத் தொடங்கிய நமக்கு முதலில் தரிசிக்க முக்தி தரும் தலமாகிய சிதம்பரம் சென்றடைந்தது. ஒருவகை இன்ப உணர்வை ஏற்படுத்தியது. சேக்கிழார் பெருமானால் போற்றப்படும் தமிழகம் உலகிலேயே வழிபாட்டுத் திருத்தலங்களை மிகுதியும் உடையது என்பதை உணர்ந்தோம். உலகில் சிவனை நினைத்தவர் எவர் தாழ்ந்தார் என்ற எண்ணம் உவகையூட்ட மூலலிங்கமாகிய மூலட்டானேஸ்வரரை உள்ளம் உருகத் தரிசித்தோம். மூலலிங் கத்துக்கு மூலட்டானேஸ்வரர் என்று பெயர். அங்கே எழுந்தருளி யுள்ள அம்பிகையின் திருநாமம் இமயபார்வதி. அங்கே தனிச்சிறப்புடன் ஆனந்த நடனம் ஆடிக்கொண்டிருக்கும் நடராச மூர்த்தியே உலாமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார்.

தில்லைபாதி திருவாசகம் பாதி என்பர். திருவாசகத்தில் 27 பதிகங்கள் தில்லை பற்றி வருவதால் தில்லை பாதி என்கிறார்கள். சிவபெருமான் கையெழுத்துப் போட்ட இடம் ஒன்றே. அதுவே திருவாசகம். இந்த அற்புதம் சைவசமயத்துக்கு மட்டுமே உண்டு. சிவனார் தம் கைப்பட எழுதிய மாணிக்கம் போன்ற பாடல்களை பாடியபடியால் மாணிக்கவாசகர் என்ற பெயரை இறைவனே தீட்சநாமமாகக் கொடுத்தார். அன்று முதல்





மாணிக்கவாசகராகப் போற்றப்படும் பெரும் மாணிக்கவாசகர் சொல்ல சிற்றம்பலத்தான் கையெழுத்திட்டு மறைந்தார். நமக்கினி பயம் ஏது தில்லைநடராசர் இருக்கும்வரை எனப் பாரதியார் கூறி இன்புறுகின்றார். இங்கே நடராசர் ஆடும் தாண்டவத்தை ஊர்த்துவ தாண்டவம் என்பர். ஊர்த்துவ தாண்டவம் என்றால் காலை மேலே தூக்கி ஆடுவது என்று பொருள். தென்காசி சிதம்பரத்தில் மட்டும் வலக்காலை மேலே தூக்கி உடலோடு ஒட்டி உச்சம் தலைவரை தூக்கி ஆடுகிறார். கல் போன்ற மனத்தையும் கரைத்து நீராக ஓடவைக்கும் திருவாசகத்தில் திருவெம்பாவை பாடிய மார்கழிமாதம் உற்சவகாலமாகும்.

புண்ணியாச்சி மடத்தில் தங்கி சிதம்பரத்தை தரிசித்த நாம் சிதம்பரத்தில் தில்லை நடராசருக்கு அபிடேகம் செய்து மாணிக்க வாசகன் சொல்ல சிற்றம்பலத்தான் எழுதிய தலமாகிய மாணிக்கவாசகர் கோயிலில் மிக பக்தியோடு திருவாசகம் ஓதி மாணிக்கருக்கு அபிடேகம் செய்து உருகி இருந்தோம். பின்பு மறைஞான சம்பந்தர் சமாதியிலும் உமாபதி சிவாச்சாரியார் சமாதியிலும் எல்லோரும் தியானம் செய்தோம். இன்றும் இச்சமாதியில் அருள்ஒளி வீசுவதை உணரக்கூடியதாய் இருந்தது.

அருள்சக்தி நிறைந்த திருத்தலமாகிய கொற்றவன் குடியைத் தரிசித்து அடுத்தநாட்காலை வைத்தீஸ்வரன் ஆலயம் பண்ருட்டி ஈஸ்வரனையும் வணங்கினோம்.

அடுத்து மிக முக்கிய தலமான பக்த சிரோன்மணி நந்தனாருக்காக நந்தியை சற்றே விலகி இருக்கப்பணித்த தலமாகிய திருப்புன்கூரை தரிசித்தோம். நந்தனாருக்கு சிறு ஆலயமும் அமைத்துள்ளார்கள்.இறைவன் ஆணையை சிரமேற் கொண்ட நந்திகேசுவரர் கம்பீரமாக அமர்ந்துள்ளார். அவரை பார்ததவுடனேயே தான் இருந்த இடத்தில் இருந்து சற்றே விலகியிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு அதிசயமே. 15 அடி நீளமும் 7 அடி அகலமும் 7 அடி உயரமும் கொண்ட பிரமாண்டமான நந்தி. இவ்வாலயத்தின் மூலவராகிய லிங்கம் மண்புற்றால் ஆன சுயம்புலிங்கமாகும். சௌந்தரநாயகி நாயகியாகவே காட்சியளிக்கிறார். பரமதேவன், இந்திரன் தேவர்கள் பூசித்த தலமாம். சம்பந்தர் அப்பர், சுந்தரர் மூவரும் போற்றிப்பாடி மகிழ்ந்ததலம்.

இங்கிருந்து சம்பந்தரின் தலமாகிய சீர்காழியை தரிசிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டோம். உலகம் உய்யவும் சைவந்தழைக்கவும் சீர்காழிப் பதியில் அவதரித்த செம்மல், மூன்றாம் பராயத்திலேயே அம்மையப்பரால் மெய்ஞ்ஞானம் அளிக்கப்பெற்ற திருஞானசம்பந்தர் பெருமானின் தலம். திருத்தோணிபுர ஈசனான சீர்காழிக்கு தோணிபுரம் என்னும் ஒரு பெயருண்டு. ஊழிக்காலத்தில் உலகம் முழுவதையும் கடல் கொள்ள அவ்வெள்ளத்திலே தோணிபுரம் மாத்திரம் வெள்ளத்தில் அழுந்தாது தோணிபோல் மிதந்ததாம். ஆகையால் அதற்கு தோணிபுரம் என்றும் பெயருண்டு. அம்மை அப்பன் காட்சி கொடுத்த தீர்த்தக் குளத்தையும் சிவதலத்தையும் உள்ளத்தில் உணர்வு பொங்க வணங்கி பின் 64 சித்தர்களின் சமாதியை தரிசித்தோம்.

சித்தரின் சமாதியை தரிசித்த நாம் இறைவன் மார்க்கண்டேயருக்காகக் காலசம்கார மூர்த்தியாக வெளிப்பட்ட தலமாகிய திருக்கடவூர் சென்றடைந்தோம். குங்கிலியகலய நாயனார் முத்தி அடைந்த திருத்தலம். அபிராமிபட்டர் அபிராமி அந்தாதிபாட அபிராமி அம்மை தன் தோட்டை கழற்றி ஆகாயத்தில் வீசி அமாவாசையை முழுமதியாக்கிய அற்புதம் நிகழ்ந்த தலம். திருப்பாற்கடலை கடைந்து எடுத்த அமுதக்குடமே அமிர்த கடேசுவரராக விளங்குகிறார். அமுதம் அருந்திய படியால் அமுதகடேசர் என அழைக்கப்படுகிறார். மார்க்கண்டேயர் வழிபட்டு காலனை வென்ற தலம். நவக்கிரகங்கள் இல்லாத சிவன்கோயில். மார்க்கண்டேயர் அவதரித்த ஊர்.

பின் சுவாமிமலை நோக்கிப் புறப்பட்டோம். தமிழ்நாட்டிலே முருகப் பெருமானின் ஆறுதலங்களை மட்டுமே படைவீடுகள் என சிறப்பாக அழைக்கப்படுகின்றன. பகைவரோடு போர்புரியும் ஒருவன் தன் படைகளோடு தங்கியிருக்கும் இடத்திற்குப் படைவீடு என்று பெயர். அவ்வாறு ஆறு இடங்களில் தங்கினார் முருகப் பெருமான். அவைதான் ஆறுபடை வீடுகள் ஆகும். இவ் ஆறுபடை வீடுகளுள் நான்காவது வீடாகிய திருவேரகமே சுவாமிமலை எனவும் அழைக்கப்படுகிறது. சிவபெருமானுக்கு முருகன் பிரணவ உபதேசம் செய்த தலமாய் புகழ் பெற்று விளங்குகின்றது. இங்கே 'மெய்யுள்ளே விளக்கை ஏற்றி' என்று பாடுகின்றார் அப்பர். சுவாமிமலையே திருமுருகாற்றுப்படைத்தலம். (தொடரும்)





**இந்து சமயப் பேரவைச் செய்திகள்**

## திருப்புகழ் முற்றோதல் பூர்த்தி விழா - 2006



04-02-2006 தொடக்கம் 08-04-2006 வரை பிரதிச் சனிக் கிழமை தோறும் நடைபெற்ற அருணகிரிநாதர் பாடல்கள் முற்றோதல் பூர்த்திவிழா 08-04-2006 சனிக்கிழமை நடை பெற்றது. முற்றோதிய அடியார்கள் யாவருக்கும் கந்தரலங்காரம் நூல் உரை யுடன் பரிசாக அளிக்கப்பட்டது. பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்ற விழாவில் பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன் சிறப்புரை யாற்றினார். நவகலச அபிசேக ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெற்றன. பேரவையின் உதவிச் செயலாளர் சிவ.முத்துலிங்கம் நன்றியுரை கூறினார்.

## சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல்

சிவயோகசுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல் இந்துசமயப் பேரவையினரால் எட்டாவது வருடமாக நடத்தப்பட்டது. காலை 7 மணி தொடக்கம் மாலை 9:30 மணி வரை நடைபெற்ற நற்சிந்தனை முற்றோதலில் பேரவையின் திருக்கூட்டத்தினருடன் யோகர் சுவாமிகளின் பக்தர்களும் கலந்து சிறப்பித்தனர். துரந்தை (ரொறன்ரோ) சிவதொண்டன் நிலைய நிர்வாகிகளில் சிலரும் கலந்து கொண்டனர். விசேட அபிடேக ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெற்றன. சிவயோகசுவாமிகளின் ஆசிகளை வேண்டிக் காலையில் இருந்து பூர்த்தியாகும்வரை முற்றோதிய பேரவையின் திருக்கூட்டத்தினருக்கு எங்கள் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரு திருமுறை முற்றோதல்


ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஞாபகார்த்தமாக ஏழாவது வருடமாக பேரவையினரால் நடத்தப்படும் பன்னிரு திருமுறை முற்றோதல்22-04-2006 சனிக்கிழமை தொடக்கம் பிரதிச்சனிக்கிழமை தோறும் காலை 8:30 மணி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. வழமையான பேரவையின் திருக்கூட்டத்தினருடன் ஆர்வமுள்ள திருமுறை ஆர்வலர்களும் கலந்து முற்றோதுகின்றனர்.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை




23-04-2006 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 8 மணிவரை திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை கொண்டாடப்பட்டது. 4ம், 5ம், 6ம் திருமுறைகளில் தெரிந்தெடுத்த திருமுறைகளை பாராயணம் செய்து அபிசேக ஆராதனைகளும் செய்யப்பட்டது.

## திருஞானசம்பந்தர் குருபூசை



12-06-2006 திங்கட்கிழமை மாலை 3 மணிதொடக்கம் 8 மணிவரை திருஞானசம்பந்தர் குருபூசை நடத்தப் பட்டது. பேரவையின் வெளியீடான தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டில் உள்ள ஞானசம்பந்தரின் பாடல்கள் யாவும் பாராயணம் செய்யப்பட்டது. அபிசேக ஆராதனைகளும் இடம்பெற்றது.

## மாணிக்கவாசகர் குருபூசை



30-06-2006 வெள்ளிக்கிழமை மாணிக்கவாசகர் குருபூசை திருவாசகம் முற்றோதிக் கொண்டாடப்பட்டது. அபிசேக ஆராதனைகளும் மணிவாசகப் பெருமான் வீதியுலாவரும் காட்சியும் இடம்பெற்றது. மேற்படி குருபூசையில் பேரவையின் திருக்கூட்டத்தினர் மிகுந்த ஈடுபாட்டுடன் கலந்து கொண்டனர்.





## ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்தி விழாவும் கந்தபுராண படனப் பூர்த்தி விழாவும்

09-06-2006 வெள்ளிக்கிழமை வைகாசி விசாகத்தன்று ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் ஜெயந்திவிழா பேரவையினரால் கொண்டாடப்பட்டது. அவரின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட நாமஜெபப் போட்டியில் 100க்கு மேற்பட்ட சிறார்கள் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுக்கொண்டார்கள். இரசிகமணி கனகசெந்திநாதன் எழுதிய மூன்றாவது கண் என்ற நூலும் வெளியிடப்பட்டது. அந்நூல் பண்டிதமணி கணவதிப்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்று நூலாகும்.



திரு. செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் முதற் பிரதி பெறுகிறார்.

கடந்த மூன்று மாதங்களாக பௌராணிகர்கள் சி. முத்துத்தம்பி, வீ. சண்முகம், பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ஆகியோரால் புராணபடனம் செய்யப்பட்ட புராணபடன பூர்த்தி விழாவும் நடைபெற்றது. பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் கந்தபுராணம் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மேற்படி விழாவிற்கு பேரவையின் தலைவர் வி. கந்தவனம் அவர்கள் தலைமை தாங்கினார். செயலாளர் சிவ. முத்துலிங்கத்தின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது. அபிடேக ஆராதனைகளும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் கதிர் துரைசிங்கம் அவர்கள் சிறப்புப் பிரதி பெறுகிறார்.



கௌரவம் பெற்ற பௌராணிகர்கள் சி. முத்துத்தம்பி, வீ. சண்முகம், பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ஆகியோர்.





# ஆத்மஜோதி முத்தையா நினைவு நாம பஜனைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவள விழா



பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் ஆசிரியரின் பவளவிழா பேரவையினரால் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது. தலைவர் திரு. கவிஞர் வி. கந்தவனத்தின் தலைமையில் நடைபெற்ற மேற்படிவிழாவில் பேரறிஞர் முருகவே பரமநாதன் சிவமயச் செல்வி பரமேஸ்வரி சரவணைமுத்து, செயலாளர் சிவ. முத்துலிங்கம் பெரியாரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர். தலைவர் கவிஞர் கந்தவனத்தினால் பாராட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.



**பேரறிஞர் திரு. முருகவே பரமநாதன் திரு. செ. சோமசுந்தரம் அவர்களை வாழ்த்திப் பேசுகிறார்.**





## இந்து சமயப்பேரவையின் பொதுக்கூட்டம்

இந்துசமயப் பேரவையின் பொதுக்கூட்டம் 22-04-2006 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் பேரவையின் உபதலைவர் திரு. கா. கனகரத்தினத்தின் தலைமையின் கீழ் நடைபெற்றது. புதிய நிர்வாகிககளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர்: | விநாயகர் கந்தவனம் |
| பொதுச்செயலாளர்: | சிவ. முத்துலிங்கம் |
| பொருளாளர்: | செ. சோமசுந்தரம் |
| உபதலைவர்கள்: | க. நவரத்தினம் |
| | திருமதி கமலாதேவி மகாலிங்கம் |
| உபசெயலாளர்கள்: | திரு. இ. சிவஞானசுந்தரம் |
| | திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர் |
| உபபொருளாளர்: | திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் |
| காப்பாளர்கள்: | கா. கனகரத்தினம் |
| | ஆ. சரவணைமுத்து |

நிர்வாகசபை உறுப்பினர்கள்
1. கே. கமலலிங்கம்
2. ம. சிவசாமி
3. சு. சிவபரமானந்தம்
4. திருமதி தங்கமுத்து தம்பித்துரை
5. திருமதி தேவமலர் நாகராசா
6. திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்
7. திருமதி விஜயலட்சுமி விக்கினேஸ்வரன்

---

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம் பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை முற்றோதுகின்ற அடியார்களின் கருத்துக்கள்

## 1. திருமுறைகள் ஓதியதன் பயன்

புழுவாய் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புவற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.

நமக்கு கிடைத்த மானிடப் பிறப்பை நன்கு பயன்படுத்தி இறைவன் திருவடியை இடைவிடாது சிந்தித்து பாடிப் படித்து அவருடைய பாதத்திருவடிகளை அடைவதே, நாம் எடுத்த மானிடப் பிறப்பின் பயன். நான் சந்திரமௌலீஸ்வரர் கோயில் போவது வழக்கம். அங்கு அடியவர்களுடன் கூடித் தொண்டுகள் செய்வோம். அடியவரில் ஒருவரான பரமேஸ்வரி- சரவணமுத்து அம்மையார் பெரிய சிவன் அடியாரும் சிவதொண்டரும்கூட. அவவின் கருணை எனக்கு மிக அளப்பரியது. ஏனெனில் யாத்திரைகள் சென்றுவரும் போது ஸ்ரீசக்கரம், தீபவிளக்கு தட்டம் உருத்திராச்சமாலை சமயநூல்கள் தேவாரப்புத்தகங்கள் பற்றியும் இறைவனின் அற்புதங்கள் பற்றியும் சொல்லுவார். இந்துசமயப் பேரவை வெளியிட்ட முத்தான தொண்டர், என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதர் ஆகிய இருபுத்தகங்கள் கிடைக்கச் செய்தார். இதன் பயனாக அடியவருடன் கூடி சிவன் கோயிலில் திருவாசகம் முற்றோதல் செய்யும் வாய்ப்பும் கிடைத்தன.

இதன் பயனாக 2001ல் இந்தியா சென்றேன். அங்கு எனது உறவினரின் உதவியுடன் திருத்தலயாத்திரை செய்தேன். ஸ்ரீரங்கம், திருவானைக்கா, முருகன் ஆறுபடைவீடு, மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி மதுரைமீனாட்சி, நெல்லை அப்பர் காந்திமதி கோயில், பிள்ளையார் பட்டி, தாயுமானவர்சுவாமி உச்சிப்பிள்ளையார், கன்னியாகுமரி, குற்றாலம், தஞ்சாவூர்சிவன், ஒன்பது நவக்கிரக கோயில்கள், திருப்பதிவெங்கடேஸ்வரர், சிதம்பரம், சீர்காழி அலமேலு, அம்மன் எனப்பல கோயில்கள் தரிசனம் கிடைக்கப் பெற்றேன்.

பின் இந்து சமயப் பேரவை அடியார்களுடன் இணைந்து பன்னிரு திருமுறைகள் முற்றோதல் செய்தேன். முக்கியமாக





சிவமுத்துலிங்கம் போக வர பாதைகாட்டி பஸ்நம்பர்சொல்லி ஊக்குவித்தார். நான் 2003ல் ஆயுட்கால உறுப்பினராக இந்து சமயப்பேரவையில் இணைந்தேன்.

திருமுறைகள் ஓதியதன் பயனாக 2003-11-05ல் எங்கள் சிவமுத்துலிங்கம் தலைமையில் பல அடியவர்கள் கூடி திருத்தல யாத்திரை செய்தோம். அங்கும் நாலுகோயிலில் திருவாசகம் முற்றோதல் செய்தோம். அவை: சிதம்பரம், திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருவண்ணாமலை இதைவிட காசி, முருகனின் ஆறுபடைவீடு, ஆறுமுகநாவலர் மடம் தில்லைக்காளி, பஞ்சபூதத்தலங்கள், புட்டபத்தி, தஞ்சாவூர்சிவன், சீர்காழி மதுரைமீனாட்சி, திருவாதவூரர் பிறந்த ஊர், அவர் வழிபட்ட தலம், கரித்துவார், பத்திரிநாத் ஆச்சிரமம், காயா, திரிவேணி சங்கமம், திருவாலங்காடுசிவன் கோயில் என்பன. இங்குதான் காரைக்கால் அம்மையார் முத்தி பெற்றதலம். இன்னும் பல கோயில் தரிசனம் செய்து எங்கள் திருத்தலயாத்திரை நிறைவு பெற்றது. இறைவன் தன்னைப் பல வடிவங்களில் பெரும் அற்புதங்கள் காட்டி அகமகிழச் செய்தார்.

இதற்கு காரணம் ஆனவர் எங்கள் சிவமுத்துலிங்கம். அவரின் ஊக்கமும் ஆக்கமுந்தான் இதற்குக் காரணம். இந்து சமயப்பேரவை ஆறுமுகநாவலர் சிலை வடிவமைப்பு செய்வித்து, அதனைப் பல கோயில்கள் கொண்டுசென்று அவரின் அரும்பெரும் சமயம் வளர்ச்சியை அறியாதவர்களுக்கும் அறியத் தந்தவர்களில் சிவமுத்துலிங்கம் ஒருவராவர். அவரின் இப்பணி சிறந்து வளர என்றும் நீண்ட ஆயுள் உடல் ஆரோக்கியத்துடன் வாழ எம்பெருமான் என்றென்றும் துணைபுரியப் பிரார்த்திக்கின்றேன்.

நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

**- திருமதி இராசமலர் முத்தையா**

## 2. பெறுதற்கரிய பயன்

கனடாவில் இந்து சமயப் பேரவையை நிறுவிய கர்த்தா ஞானசுரபி ஆத்மீக வள்ளல் நா. முத்தையா சுவாமிகள் ஆவர். இவர் மறைந்த பின்பு அவர் புகழ் நீடிப்பதற்குக் காரணம் அவர் விட்டுச் சென்ற ஆத்மீக அலைகளும் அவர் வாரிசுகளும் ஆவர். ஆத்மஜோதியின் ஒரே வாரிசாகிய திரு சிவ முத்துலிங்கம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவினுடைய ஆசையை நிறைவேற்றப் பிரதிச் சனிக்கிழமை தோறும் நல்லூர் முருகன் ஆலயத்தில் திருமுறை முற்றோதல் நடத்திக் கொண்டிருப்பது எல்லோராலும் போற்றப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும்.

இந்நிகழ்ச்சியை முன்னின்று நடத்திக் கொண்டிருக்கும் திரு. சிவமுத்துலிங்கம் அவர்கள் அதைத் திறம்பட நடத்த வேண்டும், அதனால் அடியார்கள் யாவரும் பெறுதற்கரிய மானிடப்பிறவியின் பயனை அடைய வேண்டும் என்ற நோக்குடன் அவர்கள மனத்தில் அன்பும் பண்பும் வளரத் தன்னாலான வழிமுறைகளைக் கையாண்டு அவர்களை எல்லாரிடத்தும் அன்பு கொள்ளச் செய்வது போற்றுதற்குரியது.

இந்த நல்லூர் முருகன் ஆலயத்தில் தெய்வங்கள் யாவும் முன்னிருந்ததைவிட உயிரோவியமாகக் காட்சியளித்துக் கொண் டிருக்கின்றன. காரணம் உருவேறத் திருவேறும் என்பார்களே. காரணம் திரு சிவமுத்துலிங்கம் அவர்களின் நாம பஜனையும் அவரின் தலைமையில் பிரதிச் சனிக்கிழமை தோறும் திருமுறை முற்றோதல் நடத்திப் பல அடியார்கள் அதில் ஒழுங்காகப் பங்கு பெறச் செய்வதும் திருவெம்பாவைக் காலத்தில் திருவாசகம் முற்றோதல் தவறாமல் பத்து நாட்களும் ஆர்வம் மிக்க அடியார்களுடன் நடத்தி வருவதாலும் போதிய விளக்கங்களினாலும் பௌராணிகர்கள் புராணபடனம் செய்யக்கூடிய ஒழுங்குகளைச் செய்து இறை உணர்வு மிக்க அடியார்கள் பக்தர்கள் யாவரும் பயனடையச் செய்வதுமாகும்.

சமய குரவர்கள் யாவரும் எப்படியான நிலையில் நின்று தேவாரத் திருப்பதிகங்களைப் பாடினார்கள். அவர்கள் செய்த அற்புதங்கள் என்ன என்பதை ஒவ்வொரு பதிகங்களைப் பாடும்பொழுதும் எங்கள் உள்ளம் நெகிழ்ந்துருகத்தான் செய்கிறது.

“சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிப்பவர்க்கு” என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே எத்தனை துன்பம் வந்தபோதும் இறைவனிடமே தம்மை அர்ப்பணித்து நின்று வாழும்போது அத்துன்பம் பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும். இறைவன் அவரைக் காப்பாற்றிக் கொள்வான். இறைபக்தி மிக அவசியமாகும். சைவதுரந்தரர் திரு. வி. கந்தவனம் அவர்கள் சைவம் இன்றேல் சமயம் இல்லை என்று சைவம் வளர்ச்சி பெற அயராது உழைத்து வருபவர். இந்து சமயப்பேரவைத் தலைவராக இருந்து செயலாற்றிக் கொண்டிருக்கும் அவர் பணி





தொடர என் வாழ்த்துக்கள். “செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் செயற்கரிய செய்யலாதார்”. திரு சிவ முத்துலிங்கம் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் திருமுறை முற்றோதலில் தொடக்கத்தில் தடக்கித் தடக்கிப் பாடத் தெரியாமல் பாடியவர்களை எல்லாம் கூச்சமின்றிப் பாடக்கூடியவர்களாகச் செய்தவர். அவர் ஒரு செயல்வீரன் என்றே சொல்ல வேண்டும். அவருடைய பணியினால் இந்த ஆலயம் சிறந்து விளங்குகிறது.

**– திருமதி சியாமளா ஆறுமுகம்**

## 3. தளராத பக்தி வாழ்வின் வெற்றி

பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததை வைகலும் எண்ணில், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்கிறார் ஞானசம்பந்தப் பெருமான்.

அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் பெரும்பேற்றை பெற்றேன் என்றால் என் வாழ்க்கையில் சோதனைகளும் வேதனை களும் ஆட்டிப்படைத்தபோதும், அசையாத நம்பிக்கையோடு இடையறாது இறைவனை பூசித்து வருகின்றேன். தாயகத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக, ஒரு கூட்டில் வாழ்ந்த குருவிகள் திசை மாறிப் பறந்தன. நானும் புலம்பெயர்ந்து கனடா வந்தேன். இம்மண்ணுக்கு வந்தபோது சமயம் வேறு, மொழி வேறு. உள்ளம் ஓங்கித் தவித்தது. கண்ணீர் பெருகியது. ஏதோ நடப்பதெல்லாம் உன் செயல் என்ற அலைபாயும் மனதை நிலைப்படுத்தி பாரத்தை அவனிடமே விட்டுவிட்டேன்.

சிறிது காலத்தின் பின், பல ஆலயங்கள் அமைக்கப்பட்டன. ஞானசுரபி, ஆத்மஜோதி ஐயா அவர்களின் வருகையால் சமய விழிப்புணர்வு தமிழ் மக்களிடையே விடாமுயற்சியினால் எழுந்தது. மாசு படிந்த தங்கத்தை நெருப்பிலிட்டு புடம்போட்டால் அழுக்கு நீங்கி புனிதமாவது போல், மனதை ஆண்டவனிடம் சமர்ப்பித்தால் அழுக்கு நீங்கப்படுகிறது. ஆத்மஜோதி சுவாமிகள் வழிகாட்டல், தளரா முயற்சி திருமுறை செல்வர் திரு. சிவ முத்துலிங்கம் கவிநாயகம் கந்தவனம் ஐயா, சுவாமிகளின் பக்தி நெறியில் செயலாற்றினார்கள். இந்து சமயப்பேரவையில் பல பெரியார்களும் சேர்ந்து தொண்டு புரிந்தார்கள்.

இக்காலத்தில், நானும் திருமுறை முற்றோதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபெறும் பாக்கியம் பெற்றேன். நாயன்மார்களுடைய அருளாளர்களுடைய வரலாற்றையும் அறிந்தேன். ஆன்மீக ஈடேற்றம் அடைந்து பெறும்பேற்றைப் பெற்றேன். பெற்ற பேற்றினால், அவன் அருளால் சிவபூமி பாரத பூமியில் திருத்தல யாத்திரைகள் செய்தேன். மனநிறைவுடன், பிறவிப் பயனை அடைந்த பேரின்பம் கொண்டேன். சிவ.முத்துலிங்கம் அவர்கள் காட்டும் செயல் திறமையால் சமய வளர்ச்சி ஏற்பட்டு பல ஆலயங்களில் திருமுறைகள் இடம் பெறு கின்றன. சைவமும் தமிழும் என்றும் நிலைத்து வாழும் என்ற உண்மையும் புலப்படுகின்றது. புலம்பெயர் நாட்டில், எம்மக்களை ஒழுக்க சீலர்களாக நல்வழிப்படுத்த வல்ல திருமுறைளை நாம் ஓதுவதால் எமது உள்ளம் தெளிவு பெற்று வருவதை நான் உணருகின்றேன்.

திருமுறை ஓதுவதினால் சுற்றாடலும், அவர்கள் குடும்ப சூழலும் தூய்மை அடையும் வாய்ப்பு பெறுகின்றனர். எமது ஊழ்வினையிலிருந்து, தெய்வீக வாழ்க்கை வாழ்வதற்கு கலங்கரை விளக்கமாக காண்கின்றேன். நீர்குமிழி போன்ற வாழ்க்கையில் மனத்துன்பம், பற்றுதல், மனஉளைச்சல் அகன்று, அசையாத இறை அருள் பெற்று வாழ்கின்றேன் என்பதில் ஐயமில்லை.

என்னை மேம்படுத்திய இந்து சமய பேரவைக்கு மனம் கனிந்த பாராட்டுகள். மேன்மை கொள் சைவநீதி விளங்க உங்கள் தெய்வீக பணி என்றும் தொடர வேண்டும். எதிர்கால இளம் சந்ததியினரும் ஆன்மீக அருள் பெற்று வாழ எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருள் கிடைக்க வேண்டும். அவன் திருவடி இறைஞ்சு நிற்கிறேன்.

ஆன்மீக அன்பு உள்ளம் கொண்டுள்ள முதியோர்
**தர்மதேவி சிறிசுப்பிரமணியம்**

## 4. அன்பே சிவம்

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராகக் கொளல்.

செயற்கரிய செயல்கள் செய்பவர்களே பெரியார். இவர்களைப் பின்பற்றி எல்லாவற்றுக்கும் தலைவனாகிய





இறைவனை இறுகப் பற்றிப் பிடிக்க முயல வேண்டும்.

“பெரியானை பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத
நாள் எல்லாம் பிறவா நாளே”.

எனது தந்தையார் ஓர் சிவபக்தன். நின்றும் இருந்தும் கிடந்தும், நடந்தும், சிவாயநம என்னும் ஐந்து எழுத்தினை ஓதி வாழ்ந்தவர். எனக்குச் சிறு வயதிலேயே சமய நெறிகளைப் போதித்த பெரியார், தந்தை, குரு எல்லாம் அவரே. எனக்கு அப்பொழுது எல்லாம் ஆர்வம் இருக்கவில்லை. மனவலிப்பு இல்லாமல் வெறுமனே தேவாரம், திருவாசகம், திருமந்திரம், படிப்பதும் தந்தையார் பாடும்போது கேட்பதும் தான்.

எனது பதின்மூன்றாம் வயதில் என் தாயார் முன்னிலையில் ஓர் அரிய, பெரிய நிகழ்வு ஒன்று எனக்குக் கிடைத்தது. அதன் பின் என்னுள் ஓர் இனம் புரியாத தாகம் ஏற்பட்டது. அது என்ன என்பது அப்பொழுது எனக்குப் புரியவில்லை. புராண நூல்களையும், சமய சம்பந்தமான பாடல்களையும், படிக்கும்போது மாத்திரம் மனம் சாந்தமடையும்.

யோகர் சாமியைப் பல முறை சந்தித்திருக்கிறேன். நான் கை எடுத்து வணங்கினால், மகளே காலம் வரும் அவனை இறுகப் பற்றிக் கொள் என்பார். இப்படியே திக்குத் திசை தெரியாமல் காலம் கடந்துவிட்டது. நாட்டில் குழப்பம் நாட்டை விட்டு வெளியேறும்போது எனது கையில் கிடைத்தது திருவாசகமும், திருமந்திரமும் இந்தியா, டென்மார்க், ஜெர்மனி, கனடா இப்படிச் சென்ற இடமெல்லாம் இரு புத்தகங்களையும் என்னுடன் எடுத்துச் சென்றேன். முற்றாகப் படிப்பதில்லை. கோயில்கள், மன்றங்கள், சாயி பசனைகள் என்று பல இடங்களுக்கும் போவது வழக்கம். அப்பொழுதெல்லாம் ஆத்மதாகம் ஏற்பட்டது. தியானப்பழக்கமும் வந்தது.

2000ம் ஆண்டில் திருவாசக முற்றோதல் கனடா முருகன் ஆலயத்தில் சிவ முத்துலிங்கம் தலைமையில் நடந்தது. அதில் பங்குபற்றித் திருவாசகத்தை முழுமையாகப் படித்தேன். பரவசமானேன். அன்றிலிருந்து அவர்களின் திருக்கூட்டத்தில் நானும் ஒருவரானேன்.

பின்னர் திருமுறை முற்றோதல் என்று பன்னிரு திருமுறைகளும் ஓதும் அரிய வாய்ப்பும் கிடைத்தது. அப்பொழுதுதான் என்னுள் எரிந்து கொண்டிருந்த தீ அணைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவும் தாகம் தீர்ந்தது போலவும், தண்ணென என் உள்ளம் குளிர்ந்தது. யார் பெறுவார் இந்நிலையை, எல்லோரும் பெறலாம். எடுத்து வெளியில் இயம்ப முடியாத உணர்வு சீவன், சிவம் என உணரும் உணர்வு இதற்குச் சொல்லுமில்லை செயலுமில்லை. அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன். சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் என் கனவில் சில விடயங்களைக் கூறி இருக்கிறார். அவை நிஜத்தில் நடந்திருக்கின்றன.
அவைகளைக் கூறின் விரியும்

"துன்பத்துக்குக் காரணம் அறியாமை
இன்பத்துக்குக் காரணம் அறிவு.
அறியாமை தேயத் தேய துன்பம் தொலையும்.
அறிவு வளர வளர இன்பம் வளரும்.

இன்பம் நம் உள்ளே இருப்பதை உணர்ந்தால் துன்பம் என்றும் இல்லை. அவனருளாலே அவன் தாழ் வணங்கி சிந்தை மகிழ்ந்து தியானிப்போம்.

திருமுறைகளை ஒரு முறையாவது ஓதிப்பாருங்கள் அருள் ஒளியாகிய சிவஞானம் உங்கள் அறிவில் தானே வெளிப்படும். ஆகவே யாவரும் சற்சங்கம் சேர்ந்து திருமுறைகளை ஓதி உணர்வோமாக!

வாழ்க திருமுறை ஓதும் சிவனடியார்கள்!

**- திருமதி இராசமலர் சின்னராசா**

## 5. பன்னிரு திருமுறைகளும் முற்றோதுவதினால் நான் அடைந்த ஆன்மீக முன்னேற்றம்

ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகளைக் குருவாகக் கொண்டு அவரின் போதனைகளை சிரமேற் தாங்கி அவரின் நெறிமுறைகளையும், மக்களுக்கான பிரார்த்தனைகளையும், தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு ஓர் முழுநேர ஆன்மீக தொண்டனாகச் செயற்பட்டுபவர் இந்து சமயபேரவையின் செயலாளர் ஆவார். ஆத்மஜோதி சுவாமிகளின் சீடரும், பன்னிருதிருமுறை முற்றோதல் ஒருங்கிணைப்பாளருமாகிய திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்கள் தலைமையின் கீழ் பேரவையின் ஆன்மீக செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.





இனக் கலவரத்தினால் அகாலமரணமடைந்த என் கணவரின் இழப்பும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பாரிய மன அழுத்தங்களும் என்னை மிகவும் பாதித்து தடம்புரள வைத்த நேரத்தில் இங்கு வந்தேன். உண்மையில் நான் செய்த பூர்வ புண்ணிய பலன்தான் இங்கு என்னை வரவழைத்தது என்பதை இப்போ தெரிந்து கொண்டேன்.

1999ம் ஆண்டளவில் இந்து சமய பேரவையினால் நடத்தப்படும் திருவாசகம் முற்றோதல் மற்றும் சமய நிகழ்வுகளிலும் பிரதி சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தோறும் நான் இணைந்து கொண்டேன். அதனைத் தொடர்ந்து 2000 ஆண்டிலிருந்து இவ்வருடத்துடன் 7வது முறையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பன்னிரு திருமுறை முற்றோதலில் கலந்து கொண்டதோடு என்னையும் ஓர் ஆயுட்கால உறுப்பினராகவும் நிலைநிறுத்திக் கொண்டேன்.

எம்பெருமானை மனதார நினைத்து அவரின் தன்மைகளை உணர்ந்து அருளைப் பெற்று தெய்வீக வாழ்வு பெற வழிகாட்டும் பன்னிரு திருமுறை திருவாசகம் திருப்புகழ் முற்றோதுதல், ஆன்மீக சொற்பொழிவுகள் கலந்துரையாடல் சற்சங்கம் என்பன கேட்டலுடன் பேரவையால் மேற்கொள்ளப்பட்ட இந்திய ஆன்மீக தலயாத்திரையாலும் ஏற்பட்ட இறையனுபவங்கள் அனைத்துமே என் மன ஆழத்தை தொட்டதினால் மெல்ல, மெல்ல அசை போட்டேன். இதனால் இறை உணர்வு மேலோங்கி ஆத்மீக மறுமலர்ச்சி ஏற்பட்டு, ஓர் பசுமையான தெய்வீக பக்தி நிலை என்மனதில் குடிபுகுந்தது. இதனால் நான் வாழ்நாட்களெல்லாம் அனுபவித்த தத்தளிப்பு, போராட்டம், கவலை, அச்சம் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து மனம் தெளிவடைந்து நிர்மலமான நிட்சிந்தையுடன் கூடிய ஓர் முடிவிற்கு வந்தது.

தேன் சொட்டும் திருவாசகம் படிக்கும்போது "கசிந்து கண்ணீர் மல்கிய சந்தர்ப்பங்கள்தான் எத்தனை. இந்த நிலையில் என்னை நானே ஆராய்ந்து பக்தி, தியானம், சேவை என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து சிவமுத்துலிங்கம் அவர்களின் ஆன்மீக உந்துதலுடன் கூடிய வழிகாட்டலில் என் அதிக நேரத்தை ஆன்மீக தேடலுக்குச் செலவழித்தேன். இப்படிப்பட்ட சிவகைங்கரியங்கள் நல்ல புண்ணியத்தையும் நல்ல கர்மாக்களையும் தேடித்தரும் உன்னத சிறப்பினை எம் அடுத்த பிறவிக்கு எடுத்துச் செல்லும். அடுத்த பிறவிக்கு நாம் எடுத்துச் செல்லும் ஒரே ஒரு சொத்தும் இது ஒன்றே என்ற பிறவியின் பெரும் தத்துவநோக்கமும் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எனது மனநிறைவிற்கும், மனஆறுதலுக்கும் ஆன்மீக பேரானந்தத்திற்கும் பன்னிரு திருமுறைகளே காரணம்.

இதன் அருமையும், பெருமையும் வெளியில் நின்று பார்த்தால் எப்படித் தெரியும்? உள்ளே வாருங்கள். திருவருள் கொண்டு முழு வழிநின்று ஊனுக்குள் ஒழிந்திருக்கும் ஈசனை, சீவனுக்குள் சிவமணம் பூத்தது என்று ஏற்றுக் கொண்டு சிந்தையில் தெளிவு பெற்று, வாய்மை வழிநின்று, திருமுறை காட்டும் சிவநன்நெறிகளை நாடி, அதன் வழிநின்று, வாழ்ந்து, வாழ்வின் ஆன்மீக உயர்ச்சி பெற்ற, பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு இந்து சமய பேரவையினரால் நடத்தப்படும் ஆன்மீக செயற்பாடுகளில் கலந்து கொண்டாலே போதும். இது என் அனுபவ உண்மை.

இந்த அரிய வாய்ப்பினைத் தந்த திருமுறைச்செல்வர் சிவமுத்துலிங்கம் அவர்கட்கும், இந்துசமய பேரவையின் ஆன்மீக செம்மல்கட்கும் என் சக திருமுறைத் திருக்கூட்டத்தினருக்கும் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**- திருமதி கமலாதேவி மகாலிங்கம்**

## 6. பெரும் பேறு பெற்றேன்

“அவன் அருளாலே அவன் தாள் வணங்கி” என்றார் மணிவாசகர். உள்ளுவார் உள்ளத்தில் உறையும் இறைவன் அருளால் அவனைப் பாடிப் பரவும் பெரும் பேற்றைப் பெற்றேன். சைவநெறி இம்மண்ணில் தழைத்தோங்கவும் தமிழ் மொழிவிளங்கவும் பிறந்தது இந்து சமயப் பேரவை. இதன் அரிய சேவையாலும் கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்களின் வழிகாட்டலிலும் திருமுறைச்செல்வர் சிவமுத்துலிங்கம் அவர்களின் அயராத உழைப்பினாலும் நாம் திருமுறை ஓதும் பெரிய பாக்கியத்தைப் பெற்றோம்.

ஆலயங்கள் தோறும் தீவண்ணர் திறம் பேசும் திருமுறை களைப் பாடிப்பரவி வருகின்றோம். உளப்பக்குவம் அடைந்து சிவதொண்டர்களாக வாழும் எம்மை உய்வித்த இந்து சமயப் பேரவைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**- திருமதி சா. தவனேஸ்வரி**





## 7. கோபம் வருவது குறைந்தது

2004ம் ஆண்டிலிருந்து இந்து சமயப் பேரவைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் திருமுறைகளையும் திருப்புகழ் போன்ற பாடல்களையும் ஒவ்வொரு வாரக் கடைசியிலும் ஓதுகின்றார்கள் என அறிந்து வந்து இணைந்து கொண்டு அங்கத்தவரானேன். இயல்பாகவே எனக்கு சிறுவயதிலிருந்து தேவார திருவாசகங்கள் படிப்பதிலும் இறைவணக்கத்திலும் இருந்த ஈடுபாடு இவர்களுடன் என்னைச் சேர்த்தது. நானாகத் தனித்து காலையும் மாலையும் கடவுளை வழிபட்டு தேவார திருவாசகங்கள் படிப்பேன். அதனால் எனக்கு கோபம் வருவது குறைந்து வந்தது. மன்னிக் கும் மனப்பான்மை வளர்ந்தது. ஏனையவர்களிடத்து அன்பு ஏற்பட்டு வந்தது. இறைவனிடத்தும் ஈர்ப்புக் கூடி வந்தது.

அந்த நிலையில் இந்து சமயப்பேரவை அடியார்களுடன் சேர்ந்தபோது அவர்கள் அன்புடன் என்னை அரவணைத்தார்கள். அதுவே எனக்கு அங்கு கிடைத்த முதல் மகிழ்ச்சியாகும். அது ஒரு பெறுதற்கரிய பேறு என்றே கருதுகின்றேன்.

அதுமட்டுமன்றி அடியார்கள் எல்லோருமே சுயநலமின்றி சேவை செய்கிறார்கள். உபசரிக்கின்றார்கள். தம்முடைய குடும்பத்தவர்க்கு அன்போடும் கரிசனையோடும் செய்வது போலவே செய்கின்றார்கள். அடியார்களுக்கோ அன்றி அவர் களது குடும்பத்தினருக்கும் ஏதாவது கடும் வருத்தம் அல்லது பிரச்சினைகள் என்றால் அவை தீரவேண்டுமென்று கூட்டாக இணைந்து பிரார்த்தனை வைத்து இறைவனை வேண்டுவார்கள். நாட்டுக்காகவும் வேண்டுவார்கள். இதனால் அவர்களது வருத்தங்கள் மாறி அவர்கள் திரும்பவும் திருமுறை ஓதுவதற்கு கோவிலுக்கு வந்து விடுவார்கள். நானும் இரு தடவை கடும் வருத்தமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்த போது எனக்காகவும் வேண்டிப் பிரார்த்தித்தனர். கூட்டுப் பிரார்த்தனை வீண் போவதில்லை. கூட்டுப்பிரார்த்தனை வைத்து துன்பப்பட்டவர்களின் துன்பங்களைப் போக்குதல் எனக்கு விருப்பமான ஒன்று.

கோயிலுக்குச் சென்று அடியார்களுடன் கூடித் திருமுறைகள் ஓதுதலாலும் அடியார்களுடன் ஒன்றிணைந்து பழகுவதாலும் பலவகையான நன்மைகள், மகிழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றைப் பெறுகின்றேன். நாயன்மார்களின் வழி அன்பு வழி இறைவனிடத்து அடியவர்களிடத்து ஆன்மாக்களிடத்து என அன்பு விரிந்து கொண்டு போகின்றது. சங்கம வழிபாடும் இறைவழிபாட்டைப் போலவே ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிவகுக்கும். இந்த நிலை எம்மிடத்தும் வளர்ந்து வருகின்றது. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என வள்ளுவர் கூறினார். இந்த வழிபாட்டின் மூலம் அன்பு வளர் கின்றது. அன்பு இன்பத்தைப் பெருக்குகின்றது. அன்புடையார் எல்லாமுடையவர். எனக்கு முன்னரிலும் பார்க்க இங்கு வந்தபின் அன்பு இறைவன்மீதும் அடியார்கள் மீதும் ஏனைய உயிர்கள் மீதும் பெருகுகின்றது என்பதை நான் உணர்கின்றேன்.

அத்துடன் மன இறுக்கங்கள் குறைந்து இறைவனுக்கு அண்மையில் செல்ல வேண்டும் என்ற உந்துதல் கூடுகின்றது. இசையோடு பாடி இறைவனை மகிழ்விக்க வேண்டும் என்ற ஆசை மிகுகின்றது. இவை நிறைவேற வேண்டும் என்பதற் காகவும் சங்கம வழிபாட்டின் பயன் கிடைக்க வேண்டுமென்பதற் காகவும் நான் இவ்அடியார் கூட்டத்துள் ஒருத்தியாக இருக்கின்றேன். அவை முழுமையாகக் கிடைக்க நல்லூர் முருகனின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

**- திருமதி காந்திமலர் பரஞ்சோதி**

## 8. நான் என்னும் அகந்தை போய்விட்டது!

இந்து சமயப் பேரவை செயலாளரும் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளருமான திரு. சிவ. முத்துலிங்கம் அவர்களின் தலைமையில் திருமுறை முற்றோதல் நடத்தப்பட்டு வருகின்றது. நாங்கள் இத்திருமுறை முற்றோதலில் ஆறு வருடங்களாகப் பங்குபற்றி வருகின்றோம்.

இத்திருமுறை முற்றோதலின் நிமித்தம் நான் பெற்ற அனுபவங்கள் பல. நான் இம்முற்றோதலில் சேரும் முன்னர் பஞ்சபுராணத்தை ஒழுங்குமுறைப்படி படிக்கத் தெரியாமல் இருந்தேன். ஆனால் தற்போது வடிவாக ஒழுங்குமுறைப்படி படிப்பதற்குக் கற்றுக் கொண்டேன். இம்முற்றோதல் மூலம், சமய





குரவர்கள் எல்லோரையும் பற்றி நன்கு அறிந்து கொண்டேன். அவர்கள் பாடிய தேவாரங்கள் திருவாசகங்கள் எல்லாம் எனது மனத்தை மிகவும் உருக்கக் கூடியதாக இருந்தன. அது மட்டுமல்லாமல், புராணங்கள் திருமந்திரங்கள் எல்லாமே, என் உள்ளத்திற்கு விருந்தாக இருந்தன. ஆன்மீக ஞானத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளேன். இந்த ஜீவாத்மா, பரமாத்மா என்னும் பரம் பொருளோடு எப்படி ஐக்கியப்படுகின்றது என்பதை தெளிவாக ஐயமின்றி அறிந்து கொண்டேன். சொல்லப் போனால் நான் என்னும் அகந்தை என்னை விட்டுப் போய்விட்டது. தூய மனத்தைக் கொண்டவளாகி விட்டேன். என் மனத்தையும் மாறுபாடுகளையும் கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது. எங்கு செல்லும் போதும் தனிமையில் இருக்கும் போதும் அரை நித்திரையில் இருக்கும் போதும் எல்லாம் வல்ல சிவனின் "ஓம் நமச்சிவாய" என்னும் ஐந்தெழுத்து மந்திரமே என் வாயில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இறைபக்தி மேலும் மேலும் கூடிக் கொண்டே போவதை என் அகக் கண்ணால் அறிகின்றேன்.

திருமுறைகளுக்குள் மாணிக்கவாசகரின் திருவாசகம் என்னை மிகவும் உருக்கிச் சிவனே சிவனே என் ஆன்மாவுக்கு தஞ்சம் என்னும் ஒரு முடிவு என்னுள் உதித்துவிட்டது. சொந்த பந்தம் என்பதெல்லாம் ஒரு குறுகிய காலம்தான். ஆன்மாவுக்கு அழிவில்லை. ஆதலால் இறைவனே நீயே நான் அறியாமல் செய்த பாவங்களை மன்னித்து எனக்கு முத்திப் பேறு தரவேண்டும் என்னும் உணர்வோடு வாழ்கின்றேன்.

மற்றும் திருமுறை படித்ததனால் பொறாமை, இன்னாச்சொல், கோபம், ஆத்திரப்படுதல், நான் என்னும் ஆணவம், எல்லாம் போய் மறைந்துவிட்டன. எம் வாழ்க்கையில் நாம் முன்னேற வேண்டும் என்றால் சிவன் தாள்களைப் பற்ற வேண்டும். இதுவே திருமுறை எனக்குக் காட்டிய வழி. மனத்தில் எவ்வளவோ நிம்மதி, நான் தனிமையில் இருக்கும்போதும் சிவன் என்னுடன் இருக்கின்றார் என்னும் ஓர் உணர்வு என்னுள் ஊசலாடுகிறது.

நான் இவ்வளவுக்குப் பக்தி மார்க்கத்தில் ஈடேற வழிகாட்டிய திரு சிவ.முத்துலிங்கம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இன்னும் என்னைக் கூடிய பக்தி நெறிக்கு வழிகாட்ட வேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

**- திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. நல்ல சிந்தனைகள் பிறக்கின்றன!

2003ம் ஆண்டு தொடக்கம் கனடா இந்து சமயப் பேரவை சிவனடியார் திருக்கூட்டத்துடன் நானும் ஒருத்தியாக இணைந்து திருமுறைகள் திருப்புகழ் முதலிய பாடல்களைப் பாடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கோயிலுக்கு வந்து அடியார்களுடன் கூடிப் பாடும் பொழுது நான் என்னையே மறந்து விடுகிறேன். அடியார்களுடன் கூடுவதும் இன்பம், அவர்களுடன் சேர்ந்து பாடுவதும் இன்பம். இப்பொழுது தான் நான் பயனுள்ள வாழ்க்கை வாழ்வதாக உணர்கின்றேன்.

இறைவனை எந்த நேரமும் நினைக்கின்றேன். இதனால் எனக்கு ஏனையவர்கள் மீது அன்பு ஏற்படுகின்றது. அடியவர் களாயினும் பிறராயினும் மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறது. நல்ல சிந்தனைகள் பிறக்கின்றன. மன அழுத்தங்கள் - நோய்கள் என்பன குறைந்து இல்லாமல் போகின்றன. "சிவாய நம வென்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்பதை உணர்கின்றேன். முன்பு போல் மற்றவர்கள் மீது கோபம் வருவதில்லை. மன்னித்து மறக்கும் மனப்பான்மை ஏற்படுகின்றது. பயம் முன்பு போல் இல்லை. இறைவன் என்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

திருமுறைகளை ஒழுங்காகச் சென்று ஓதுவதால் தேவார திருவாசகம் திருப்புகழ் என்பன பலவற்றை மனனம் செய்து கொள்கிறேன். பண்ணோடு பாடவும் பழகிக் கொள்கிறேன். 'பண்ணோடு பாடுதல்தான் பரமனுக்கு இசைவானது' என்பதனால் இயன்றளவு (இசையோடு) பண்ணோடு பாடுகின்றேன். அடியார்கள் எல்லோரும் அவ்வாறு முயல்கின்றார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் மாலையில் நடக்கும் கூட்டுப்பிரார்த்தனை எனக்கு மிகவும் பிடிக்கும். நான் அதற்குத் தவறாது சென்று கலந்து கொண்டு இறைவன் அருள் பெறுகின்றேன். நாம் பிறந்த பயனை அடைய வேண்டும். அப்பயன் எனக்கு இப்பொழுது கிடைத்திருக்கின்றது. அடியார் திருக்கூட்டத்தில் சேர வேண்டும். அவர்களுடன் இணைந்து சமய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும், படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு செயற்பட என்ன புண்ணியம்செய்தேனோ? இதன்பின் இதனால் எனக்கு பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன.

**திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு**





## 10. ஒளி பிறந்தது!

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே"
- என்றார் திருமூலர்.

பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளைத் தாயகத்திற் தேடித் தேடிக் கூடிக் கூடிக் கும்பிட்டு அருளொளி பெருக அங்கு நாம் வாழ்ந்தோம். இனவாதச் சூழல் காற்றுச் சுற்றியடிக்க போர் மேகம் சூழ்ந்து குண்டு மாரி பொழிந்தது. கோயில்கள் வீழ்ந்தன. கோபுரங்கள் சாய்ந்தன. மக்கள் மடிந்தனர். மண்ணே இருண்டது. உயிரைச் சுமந்து இந்தப் பனிபடர்ந்த பூமியில் வந்து மூலைக்குள் முடங்கிக் கிடந்த எம்முள்ளம் ஒளிபெற ஆலயங்கள் திறக்கப்பட்டன. பல் மொழிக்கலாச்சாரமும் பல்மதப் பண்பாடும் நடைமுறையில் இருக்கும் பூமியில் சைவநெறியும் தமிழ் மொழியும் கலைகலாச்சாரம் பண்பாடு ஆன்மீக ஈடேற்றம் பெற்றுய்யும் நன் நோக்கத்தோடு இந்து சமயப்பேரவை ஆரம்பிக்கப்பட்டு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

ஆத்மஜோதி முத்தையா ஐயாவின் வருகை நமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாய் அமைந்தது. திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்களுக்குக் குருவானார் ஆத்மஜோதி ஐயா அவர்கள். ஐயாவின் கனவுகளை நனவாக்கும் நோக்கோடு அயராதுளைக்கின்றார் சிவமுத்துலிங்கம் அவர்கள். கலாநிதி கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்களின் வழிகாட்டலிலும் திருமுறைச் செல்வரின் உந்துதலிலும் நாம் நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும் தேடித் திரிந்து இறைவனை வழிபடும் அருளைப் பெற்றோம். இன்று இந்து சமயப் பேரவை அரும்பணியாற்றுகின்றது. மனப்பக்குவமும் அன்பும் பண்பும் அரவணைக்கும் பாங்கும் சீவகாருணியமும், கலைகலாச்சாரப் பண்பும் சிவத்தொண்டு செய்யும் சீலமும் கொண்டு இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சிவத்தொண்டர்களாகிய நாம் வருங்கால நம் சந்ததியினரும் நெறி நின்று வாழ எம்மால் ஆவன செய்து வாழ்வோம். எம்மை வழிநடத்திச் செல்லும் இந்துசமயப் பேரவைக்கு நன்றியும் கடமைப்பாடும் உடையவர்களாவோம்.

வணக்கம்.

**- திருமதி த. தம்பித்துரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. பாவங்களைப் போக்கினேன்!

என் குருநாதருக்கு வணக்கம்.

நான் முற்பிறப்பில் செய்த புண்ணிய பலன்தான் இன்று என்னை இந்நிலைக்கு இட்டுச் செல்கின்றது என நினைக்கிறேன். இரண்டாயிரமாம் ஆண்டு நான் கனடா கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்ற சமயம் திரு சிவ. முத்துலிங்கம் அவர்கள் என்னிடம் வந்து திருமுறை ஓதும்படி பணித்தார். அன்று தான் எனது பொற்காலம் தொடங்கியது. அன்று தொட்டு இன்றுவரை நான் திருமுறை ஓதுவதில் பங்கு பற்றிக் கொண்டு இருக்கிறேன். இந்து சமயப்பேரவையின் சார்பில் சிவனடியார் திருக்கூட்டத்தில் அடியேனும் ஒருத்தியாய் இருக்கிறேன். ஆன்மீக வாழ்க்கை வாழ்வதற்கு சிவனடியார் திருக்கூட்டம் எனக்கு வழிசமைத்துள்ளது. உண்மையில் என்னுள் இருந்த கோபம் அகந்தை, பிடிவாதம் எங்கு மறைந்ததோ தெரியாது. அவர்களுடன் பழகி புரிந்துணர்வு, இறைபக்தி, அன்பு இவைகளை கடைப்பிடித்துள்ளேன். திருமுறை திருவாசகம், திருப்புகழ், இவைகளை பக்தியுடன் மெய்மறந்து ஓத என்மனம் உருகி இறைவனின் திருவடிகளை நாடும். எங்கள் திருக்கூட்டத்தாருடன் ஒன்றியிருப்பது, திருமுறை ஓதுவது, திருத்தொண்டு செய்வது, எனது விருப்பம். இப்பாதையைக் காட்டிய எனது மதிப்புக்குரிய ஆத்மஜோதி ஐயாவின் வாரிசு திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம் அவர்களே. கடந்த ஏழு வருடங்களாக திருமுறை முற்றோதல், திருப்புகழ் முற்றோதல், திருவாசகம் முற்றோதல் செய்து பூர்த்தி விழாக்கள் செய்து இவைகளில் கலந்த அடியார்களுக்கு பரிசில்கள், கேடயங்கள் பரிசளித்து வருகிறோம்.

2003ம் ஆண்டும், ஐந்தாம் ஆண்டும் இந்தியத்தல யாத்திரை மேற்கொண்டு நூறுக்கும் அதிகமான கோயில்களை தரிசித்து அங்கும் திருவாசகம் முற்றோதி அபிடேகங்கள் செய்து வந்துள்ளோம். திருமுறை ஓதிய பலன்தான் எனக்கு தலயாத்திரை செய்ய கிடைத்தபேறு என்று நம்புகிறேன். காசியில் கங்கையில் காலை, மாலை என பல நாட்கள் நீராடி எனது பாவங்களை போக்கினேன். கேதாரீஸ்வரருக்கு எங்கள் கைகளால் தொட்டு அபிசேகங்கள் செய்து தரிசித்தோம். இவை தவிர வாழ்க்கையில் வேறு என்ன வேண்டும். திருவருளும், குருவருளும் வழிநடத்தி செல்கிறது எங்களை, “கடவுளை நம்பினார் கைவிடப்படார்” திருக்கார்த்திகை அன்று திருவண்ணாமலையில் கிரிவலம் வந்த





நிகழ்வு எனது மனத்திரையில் பதிந்திருக்கிறது. இவைகள் எல்லாம் நிறைவேற எனக்கு வழிசமைத்த காரணகர்த்தா திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம் “எங்கள் குருநாதர்” அவர்களுக்கு என் நன்றி சொற்களில் மட்டுமன்றி உணர்விலும் கலந்துள்ளது.

**- திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்**

## 12. சமய அறிவு வளர்ந்தது!

பஞ்சபுராணம் என்பதே ஒரு சிதம்பரசக்கரமாக இருந்த எனக்கு பஞ்சபுராணத்தை அதன் கருத்தோடு கற்று அதைப் பாடியவர்களுடைய சரிதம் எல்லாம் அறியக்கூடிய அளவிற்கு கற்றுவிட்டேன்.

இங்கு வந்து கூடியதே நான் முற்பிறப்பில் செய்த பூர்வபுண்ணியம் என்று நிச்சயமாக எண்ணுகிறேன்.

நான் இவற்றை அறிந்ததோடல்லாமல் அவர்கள் பாடிய தலங்களுக்கு யாத்திரை சென்று அவர்கள் பாடிய பாடல்கள் சிலவற்றைப் பாடியுள்ளேன்.

பாடல் பெற்ற பல தலங்களுக்கும் மகான்களின் சன்னிதானங்களுக்கும் சென்று தரிசித்து வந்தேன். அவற்றிற்கு மேலாக சிவதலங்களில் ஒன்றான காசியில் லிங்கவடிவமாக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் காசிவிசுவநாதருக்கு என் கைகளினாலே தடவி இருமுறை அபிடேகம் செய்தேன். அத்துடன் திருஅண்ணாமலையை மும்முறை வலம்வரும் பேறு பெற்றேன்.

இந்தப் புண்ணிய பலன்கள் எல்லாம் எங்களை ஊக்குவித்து வழிநடத்தும் குருவிற்கே உரித்தானது.

ஒரு ஆன்மீக அலையுடன்தான் இதில் எல்லோரும் கூடுகிறார்கள். இங்கு ஆன்மீகத்தில் முதிர்ச்சி அடைந்து ஊறிப்போனவர்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள். நான் ஆன்மீகத்தில் முதலாம் படியில் நின்று நிமிர்ந்து பார்க்கிறேன், முழுமையாகப் பெற்றிட வேண்டும் என்று.

**- திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. பெரும் பேறு பெற்றேன்!

பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிற்கின்ற பரம்பொருள் நினைப்பவர் உள்ளத்தில் நீங்காது உறைவான். அவனைத் தாயக மண்ணில் ஊர்கள் தோறும் தேடித்தேடிக் கும்பிட்டேன் நான் கேட்டவை தந்தார்.

பனிப்பூமியாம் கனடாவுக்கு வந்து ஏங்கிக் கொண்டிருந்தேன். ஆலயங்கள் அமைக்கப்பட்டன. ஆத்மஜோதி முத்தையா ஐயாவின் வருகை திருவருள் நிறைந்ததே. அவரால் இந்து சமயப் பேரவை தொடங்கப்பட்டது திருமுறை செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்களின் அயராத முயற்சியினாலும் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் வழிகாட்டலிலும் வீட்டுக்குள் முடங்கி இருந்த முதியவர் களாகிய எம்மையும் வரும்கால நம் சிறார்களை நெறிப்படுத்தும் பொருட்டும் சைவசமயத்தை வளர்க்கும் பேர் ஆர்வத்தினாலும் திருமுறை முற்றோதும் வாய்ப்பினை எமக்களிக்கின்றனர். திருமுறைகளை முறையாக ஓதுவதனால் எம்முள்ளம் புனிதம் அடைந்து பக்குவப்படுகின்றது. திருமுறை படிப்பதின் பயனால் திருத்தலயாத்திரை செய்யும் வாய்ப்பை பெற்றேன். குறிப்பாக தஞ்சாவூர் பெரிய நந்தி கோவிலில் பிரதோஷகால அபிடேகம் காணும் வாய்ப்பைப் பெற்றேன். அடியார் திருக்கூட்டம் அன்பும் கருணையும் கொண்டவர்களாக விளங்குகிறார்கள்.

எம்மை இந்த பக்தி நெறிக்கு இட்டுச் செல்லும் இந்து சமய பேரவைக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வணக்கம்.

**- திருமதி தவமணி தியாகராசா**

## 14. பேரப்பிள்ளைகளும் படிப்பார்கள்

அடியார்கள் எல்லோரும் சேர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் கோயிலில் தேவாரம் படிக்கிறோம். அதைப்படிப்பதால் எனக்கு மனச்சாந்தியும் இறைவழிபாடும் உடல் நலமும் கிடைத்துள்ளன. நான் வராத நாட்களில் எனது சாமியறையில் தேவாரம் படிப்பேன். பேரப் பிள்ளைகளும் என்னோடு சொல்லிக்கொடுக்கப் படிப்பார்கள்.





எங்களுக்கு இதில் ஊக்கம் காட்டி மேன்மையடையச்செய்த குருவானவரையும் வாழ்த்துகிறேன். நாங்கள் இந்தியாவிலும் சில கோயில்களில் திருவாசகம் முற்றோதினோம். அதுவும் எனக்கு நிம்மதியைத்தந்து. அங்கே பல கோயில்களில் பஜனைகள் செய்தோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**- பார்வதி நடராசா**

## 15. திருக்கூட்டத்தின் சிறப்பால் உயர்ந்தேன்

ஈழத்தில் வாழ்ந்த பொழுது திருக்கூட்டத்தின் சிறப்பை எனக்கு உணர வைத்தவர் ஆசைப்பிள்ளை ஐயா என அழைக்கப்படும். இல்லற ஞானி சரவணைமுத்து அவர்கள். அவரின் தொடர்பினால் பல ஈழத்து ஞானிகளைத் தரிசிக்கும் பேறு பெற்றேன். அவர் எனக்கு ஆன்மீக வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். கனடாவில் இந்துசமயப்பேரவை தொடங்கிய காலத்திலிருந்து பேரவையின் பணிகளினால் ஈர்க்கப்பட்டு அந்நிறுவனத்தின் ஒருவனாக என்னையும் இணைத்துக் கொண்டேன்.

பேரவையின் ஆயுள்கால அங்கத்தவனாகவும் நிர்வாகிகளில் ஒருவனாகவும் இருந்து என்னால் முடிந்த பணிகளையாற்றினேன். திருமுறை ஓதுவதால் என் உள்ளத்தில் உள்ள குற்றம் குறைகளை நீக்கலாம் என்பதை அடியேன் என் அனுபவத்தில் உணர்ந்துள்ளேன். இவற்றின் சிறப்பை உணர்ந்து திருமுறைகளில் பல பாடல்களை மனனம் செய்துள்ளேன்.

திருமுறைகள், திருப்புகழ் போன்ற பாடல்களை ஓதுவதால் அடியேன் பல இடர்களில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளேன். இறைவாக்காக அருளாளர்களினால் பாடப்பட்ட திருமுறைகள் எமது மக்களுக்கு மத்தியில் அன்பையும் பக்தியையும் வளர்க்கும்.

ஆத்மஜோதி சுவாமிகளின் பணிகளில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அவரில் அடியேன் வைத்திருந்த மதிப்பினாலே பேரவையில் ஒருவனாக இணைந்து கொண்டேன்.

பேரவையின் பணிகள் தொடர என் வாழ்த்துக்கள்.

**- கணபதிப்பிள்ளை நித்தியானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. திருக்கூட்டத்தின் தொடர்பினால் என் உள்ளம் குளிர்மை அடைந்துள்ளது

கனடாவில் எமது சைவமும், எமது தமிழ் கலாச்சாரமும், பண்பாடும் எமது இளம் சந்ததியினருக்கு மத்தியில் மேலோங்க வேண்டுமென்பது அடியேனின் விருப்பம். இந்து சமயப் பேரவை ஆயுட்கால அங்கத்தவர்களில் நானும் ஒருவனாக இணைந்து என்னால் முடிந்த பணிகளைச் செய்கின்றேன். பேரவை நடத்தும் நிகழ்ச்சிகளிலும் பிரார்த்தனைகளிலும், முற்றோதலிலும் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். என் பொழுது தவப்பொழுதானது. ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் என் ஞானகுரு. அவர் அல்லும் பகலும் என் நல்வாழ்விற்கு வழிகாட்டுகின்றார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்துசமயப் பேரவையின் பணிகளுக்கு ஆதரவு கொடுப்பதால் நான் பெருமை அடைகின்றேன்.

**- செல்லத்தம்பி மார்க்கண்டு**

## 17. சமய அறிவையும் ஆன்மீக உணர்வையும் பெற்றுள்ளேன்

கடந்த ஏழு வருடங்களாக இந்து சமயப் பேரவையின் திருக்கூட்டத்தினருடன் இணைந்து திருமுறைகளை ஓதியும், தொண்டுகளைச் செய்தும் என் கர்மவினைகளை கழுவி வருகின்றேன். திருக்கூட்டத்தினர் நடத்தும் முற்றோதல் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதும் திருக்கூட்டத்தினருக்குத் தொண்டு செய்வதும், ஆலய தொண்டுகளை மேற்கொள்வதும் எனக்கு மிகவும் விருப்பமான காரியம்.

பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் எனது ஆன்மீககுரு. அவர் தமிழ் ஈழத்தில் அமைதி வேண்டி வடமாகாணம் முழுவதும் பாதயாத்திரை செய்த பொழுது, வன்னிப்பிரதேசத்தில் அடியேனும் பாதயாத்திரையில் கலந்து கொண்டேன். சுவாமிகளுக்கும் பாதபூசை செய்து அந்நீரை யாவருக்கும் தெளித்து நாம் எங்கள் குருபக்தியை வெளிப்படுத்தினோம்.

மழையில்லாமல் வரண்டு போயிருந்த வன்னிப்பிரதேசம் அவர் பாதயாத்திரை மேற்கொண்டு மழைபெய்யுமாறு வேண்டி





பிரார்த்தித்தால் மறுநாளே பெரும்மழை பெய்தது. எங்கள் வன்னி மண்ணும் செழிப்படைந்து நல்ல விளைவை எங்களுக்குத் தந்தது.

திருமுறைகளைக் கடந்த பல வருடங்களாக ஓதுவதால் நான் பல பேறுகளைப் பெற்றுள்ளேன். எல்லோருடனும் அன்பாகப் பழக வேண்டுமென்ற எண்ணம் மேலோங்குகின்றது. ஒரு விவசாயியான நான் சமய அறிவையும், ஆன்மீக உணர்வையும் பெற்றுள்ளேன்.

**- காசிப்பிள்ளை கோபாலபிள்ளை**

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.


**S & S Engravers**

**வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள், வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள் தேவைககேற்ப**

**குறைந்த விலையில்**
**நிறைந்த தரத்தில்**

Name plate, Plaques, Awards, Directional Signs, Logos, Donor Recognition, Systems & Panels, Tropbies, Medals & Ribbons




**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**
**Fax: 416-609-0272**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Catechism on Saivaism

## Primary Mantra (Sacred Word) Expressing Devotion to Lord Siva

1. What is the Sacre d Mantra the Devotees of Lord Siva meditate upon?
   Na-Ma-Si-Va-Ya.

2. What is another way of referring to this Holy word?
   It is also called Shri Panchadsharam - Shri-Holy, Pancha-five, Adchara-letters.

3. What type of people are entitled to recite or meditate on this Holy word?
   Those who never engage in any killings, who never eat any meat or fish, (Strict vegetarians), who never takes any alcoholic drinks (Teetotalers), those who lead a disciplined and virtuous life, and those who have undergone an initiation ceremony called 'Siva Theedchai" to embrace Saivaite tradition.

4. What is 'Sivatheedchai"?
   Knowing the meaning, and reciting the primary 'Mantra' or 'The sacred word or hymn' of Lord Siva (Om Namasivaya) and making a determination to follow the principles of Saivaite tradition.

5. What are these principles?
   These principles are -
   1. Abstention from, eating meat or fish, drinking any kind of alcohol or taking drugs, smoking
   2. Refraining from all kinds of adultery, (Sexual mis conduct)
   3. Never harm any one by thoughts, words, or deeds.
   4. Always adhering to physical and mental purity with an attitude of love and compassion to all the living beings.





   5. Offering prayers to God in the form of Lord Siva at least two times a day - Morning and evening (at sun rise and sun set).

   6 Showing respect to parents, teachers and elders and being loyal to one's family.

6. How many times should the 'Holy Five letter Mantra" (OM Na Ma Si Va Ya) be recited?
   This Mantra should be recited 10 times or 108 times.

7. Which direction should we be seated while meditation on the Sacred word?
   Towards East or North.

8 How should be we seated while we meditate?
   We should cross our legs and be seated at the ground on a mat or plank.

9. What is 'Pathmasana"?
   Sitting cross legged with both feet placed on the either thighs, and sitting erect, both eyes looking concentrated on the top of our nose.

10. How should the mind be when meditating or chanting the Sacred word of 'Namasivaya" ?
   Our mind should be thinking about the glories of God in the form of Lord Siva.

---

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலயம் விடுத்துள்ள விய வருடப் பிரார்த்தனை

### காலை மாலைப் பிரார்த்தனை

அம்மா, தயாபரி, தாயே துர்க்கா!
உன் திருவடிகளே சரணம்!

மந்திர ஜெபமோ, ஆசன முறையோ, நியாயசாதிகளோ எனக்குத் தெரியாது. இது சத்தியம் அம்மா. ஆனால் நான் உன்னைச் சார்ந்து வாழுகின்றேன். எனக்கு வேறு துணை இல்லை. எவ்வளவு தான் பிழைகள் செய்திருந்தாலும் உனக்கே உரிய கருணையினால் என்னைக் காப்பாற்ற வேண்டும். என் உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்தியவை. எனக்கு எஞ்சியுள்ள வாழ்நாள் உன்னை வழிபடுவதில் முற்றாக நிலைக்கட்டும். என்னைப்போல் தவித்துக் கொண்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் மக்களைக் கரையேற்றி இரட்சிப்பாயாக, என் தாயே உன் திருவடிகளே சரணம் சரணம். இக்கலியுகத்தில் துன்பங்களைப் போக்கி மக்களுக்கு அவர்கள் வேண்டும் நலமனைத்தும் அளித்துக் காப்பவள் நீயே தான். உன் புகழ் பற்றி நூல்கள் உறுதி கூறுகின்றன. அதனை நாமும் மேற்கொண்டு வாழ்வும், வளமும், அருளும் பொருளும் அமைதியும் ஆனந்தமும் பெறக்கருணை பாலிப்பாயாக.

அம்மா! தாயே!
தாயே! துர்க்கா!
உன் திருவடிகளே
சரணம்! சரணம்!! சரணம்!!!

---

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.





# பிதிர் யஞ்ஞம்

மாவை. சண்முகநாதக் குருக்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி:

சர்வோத்ர சுகிரஹ: ஸந்து
ஸர்வோ ஸந்து நிராமயா:
ஸர்வே பத்ரானி பஸ்யந்து
மா கஸ்சித் துக்கபாக் பவேத்

உத்தராயண காலத்தில் சிவராத்திரி அமாவாசையும், தக்ஷிணாயன காலத்தில் ஆடி அமாவாசையும் பிதிர்களுக்குரிய மிகமிக விசேடமான தினங்களென சிவாகமங்கள் எடுத்துக் கூறுகின்றன. ஆடி அமாவாசை வடஈழத்தின் கேந்திர தலமான மாவைக் கந்தனின் தீர்த்ததினமாகும். இதில் நகுலேசுவரத்தில் கண்டகி சமுத்திர தீர்த்த மகிமையும் கொண்டதாகும். பிதிர் கடன்கள் நிறைவு செய்ய அருளப்பட்ட தீர்த்த தினமுமாகும். இரு அயனங்களில் வரும் இரு அமாவாசை தினங்களும் மிகுந்த மேன்மையுடையதாகும். உயிர்ச்சத்துக்கள் நிறைந்த அம்சங் களையும் இத்தீர்த்த தினங்கள் மனிதனுக்கு இணைத்துவிடுகின்றன.

இந்நாட்களில் பரமசிவம் தீர்த்தக்கேணி, ஆறு, குளம், சமுத்திரம் எனும் இடங்களில் திருவுலாக் கொண்டு எழுந்தருளி ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் திருவருளும் ஆங்கு கூடி நிற்கும். அட்ட மூர்த்திகளுள் "பவன்" எனும் திருநாமங்களை யுடைய சிவனது வல்லமையாகிய சியேட்டை சலரூபமாக அமைந்து தன்னை அடைந்து தரிசித்து ஆசமித்து சங்கல்பரூபமாக தீர்த்தம் ஆடி பிதிர் கர்மானுட்டங்களைச் செய்த அடியார்களது பிறவிகளாகிய வெப்பத்தை நீக்கித் தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து தத்துவாதீதராய் விளங்கும் சிவத்துடன் அவர்களைக் கூட்டுவிக்குமென சிவாகமங்கள் விளங்க வைக்கின்றன.

"இத்தரு கடவுட் சாறு நோக்கியங் கிறைஞ்சு வோரும்
அத்தகு விழவி னீற்றித் தீர்த்த நீராடு வோரும்
பைத்தபாம் பல்குற் செவ்வாப் பனிமொழி யொருபான் மேய
வித்தகன் கயிலை நண்ணி விறந்த கண நாத ராவார்".
- (காஞ்சிப் புராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் சைவப்பெருமக்களே!

உயர்ந்தாலும், தாழ்ந்தாலும் நாம் சைவர்களாகவே வாழ வேண்டும். 5000 ஆண்டுகளுக்கு மேலாக எமது அனுட்டானங்கள் தொடர்ச்சியாக நிலைபெற்று வருவது கண்கூடு. கால வினோதங்களால் வரும் துயரங்களும் துன்பங்களும் கஷ்ட நஷ்டங்களும் வந்து கொண்டேயிருக்கும். நாம் மனம் தளராது இவற்றினை எதிர்த்து “எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே, அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து செழித்ததும் இந்நாடே” என்று தாம் பிறந்த புண்ணிய பூமியின் புகழ் பாடிய கவி பாரதியின் வழியை பின்பற்றி எங்களது நாடு செழிக்க, நாம் உய்ய, எமது மக்கள் இன்புற்று வாழ, சைவம் தழைத்தோங்க நாமனைவரும் மாசி சிவராத்திரி, ஆடி அமாவாசை இவைகளிலாவது எங்கெல்லாம் வசதிகள் உண்டோ அங்கெல்லாம் அமாவாசை சங்கல்ப தீர்த்தம் ஆடிப் பிதிர்தர்ப்பண, கர்மாக்கள் என்பவற்றைத் தவறாது இயற்றி சிவபெருமானின் திருவருளுக்காளாகுவோமாக.

சைவசமயிகளது வாழ்வு தெய்வீக வாழ்வாக அமைந்து சிறப்போடு அவர்கள் வாழத் தினமும் பிரார்ததிக்கும் அந்தண சிரேஷ்டர்களும் தத்தமது தர்ப்பணகாரியங்களில்கூட,

“ஏஷாம் ந மாதா ந பிதா ந ப்ராதா ந ச பாந்தவா:
தே ஸர்வே திருப்தி மாயாந்து மயோத் ஸ்ருஷ்டை: குசோதகை:

‘என எவர்களுக்கு தாயோ, தந்தையோ, நண்பர்களோ, தாயாதிகளோ, பந்துக்களோ தர்ப்பணஞ்செய்ய இல்லையோ அவர்கட்கெல்லாம் எனது தர்ப்பணத்தில் என்னால் இத்தர்ப்பைகள் மூலம் விடும் தர்ப்பண தீர்த்தம் மூலம் திருப்தியடையட்டும்’ என தர்ப்பைக் கூர்ச்சத்தின் மூலம் தர்ப்பணம் செய்யும் புண்ணியத்தையும் ஆற்றுகிறார்கள்.

பறங்கியரும் ஒல்லாந்தர்களும் ஈழநாட்டுச் சைவர்களைத் துன்புறுத்திக் கொன்றும் சைவாலயங்களை இடித்து அதன் மேல் தமது கிறித்துவ ஆலயங்களை எழுப்பியும் சைவக் கலாச்சாரங்களை அடியோடு அழித்தும் சைவர்களை இல்லாதொழிக்க அயராது முயன்றனர்.







இன்று அந்த அநியாய துட்டர்கள் எங்கே? தத்தம் நிலையில் அமைதியாக அடங்கி இறைவனை நினைத்து ஆராதித்தனர் சைவர்கள். இதன் பயனால் வீறு கொண்டெழுந்தது சைவம். இருந்தும் அப்பறங்கியரது வழித்தோன்றல்கள் இன்றும் எம்மிடையே நச்சுக் கிருமிகள் போன்று வாழ்ந்து கொண்டு மேற்கத்தைய குருசாமி ஆசாமிகளை இங்கு வரவழைத்தும் மாயாவாத போதனைகளைப் பரப்பியும் உலோகாயத வாழ்வினை புகுத்தியும் அருமையான சைவசமயத்தையும் சைவர்களையும் இல்லாதொழிக்க மிலேச்சச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இவற்றினை அடிசாய்க்க சைவர்களாகிய நாம் அனைவரும் எம்மை இரட்சித்தருளும் சிவசின்னங்களான விபூதி கொண்ட நெற்றியுடனும் உருத்திராட்ச மாலை கொண்ட கண்டத்தோடும் சிவசக்திமயமான வேட்டி சால்வையோடு இணைந்த உடலோடும்,

55ஆம் பக்கம் பார்க்க


FASHION FLORIST INC.
பாஷன் பூக்களஞ்சியம்
பாபுவின் கைவண்ணத்தில்
பூக்கள் மாலையாகின்றன



416-754-8282
4400 Sheppard Ave. East, Unit 5
Scarborough, ON.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்கவியார் என் பார்வையில்

திரு. வி. வேலுப்பிள்ளை

**சென்ற இதழ் தொடர்ச்சி:**

இவர்கள் இருவரும் அருட்கவியாரின் அருள்வாககைப் பெற்றுத் தங்கையின் திருமணப்பொருத்தமும் நன்கு அமையப்பெற்ற திருப்தியுடன் சென்றார்கள். இதில் நாங்கள் அறிவது என்ன என்றால் அருட்கவியாருக்கு எல்லாத் தரமக்களிடமும் நம்பிக்கை யான தொடர்பு இருந்ததும் இதே வேளையில் எல்லாத்தர மக்களும் இவரிடம் ஒரு பக்தியை வைத்திருந்தார்கள் என்பதுதான்.

மேற்படி சம்பவத்தையாரும் கற்பனைக்கதை என்று கொள்ளக் கூடாது என்பதால் உண்மையைக் கூறிவிடுகிறேன். நான்தான் அந்தச் சுங்க அதிகாரியின் தங்கையை மணந்தவன். எனது மாமன் மகன்தான் அந்தச் சுங்க அதிகாரி பத்மநாதன். எனது மாமா பெண்ணைத் திருமணம் செய்யப் பொருத்தம் பார்க்க எங்கள் ஊர் அருட்கவியாரிடம்தான் வந்து அனுமதி பெற்றார்கள் என்று எண்ணும்போது இதுவும் இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்று என்று எண்ணி வியக்கிறேன். இத்துடன் அந்தச் சுங்க அதிகாரியின் எதிர்காலம், பதவி உயர்வு பற்றிய அருட்கவியாரின் அருள்வாக்குச் சிலகால இடைவெளியில் சிறந்து விளங்கியதும் உண்மையான செய்திதான்.

இன்னும் அருட்கவியாருடன் கொண்ட தொடர்பில் பட்டறிந்த அனுபவங்களில் ஒன்றிரண்டைத் தருகிறேன். உயர் வகுப்பு மாணவராய் அருட்கவியார் படித்தபோது இவருடன் திரு சரவணமுத்து என்ற சைவக்குருக்களும் உடன் மாணவராய் இருந்தார். இருவரும் நாடகங்கள் மற்றும் கலைகளில் நல்ல ஈடுபாட்டுடன் இருந்தார்கள். அப்போ பாடசாலை விழா ஒன்றில் அருட்கவியார் ஒரு கிராமத்தான் மனைவியாகவும், சரவணமுத்து கிராமத்தாராகவும் நடித்தார்கள். கணவன் மனைவி இருவருக் குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டு ஒவ்வொருவரும் தான்தான் உயர்ந்தவர் என்று வாதிட்டனர். கிராமப்பாடல் மூலம் இதை வெளிப்படுத்தினார். “காளைமாட்டுக் கலப்பை பிடித்து உழவு தெரியுமோ? கமம்புலத்தைப் பார்த்துக் காசு தேடத்தெரியுமோ? ஆண்மையுடன் மரங்களிலே ஏறத்தெரியுமோ? பரிபக்குவமாய் இறைக்கத் துலா மிதிக்கத் தெரியுமோ?”‘ என்று கிராமத்தார் பாட அவர்மனையாள் உடனே “வீட்டு விலக்கில் நானிருக்க வெண்காயமும் சோறு தின்றதை மறந்திட்டியோ சாமி,





மறந்திட்டியோ” என்று பதில் உரைத்தார். என்னதான் ஆண்கள் வீரம் பேசினாலும் வீட்டில் வந்து மனைவி சமைத்ததைத்தானே உண்ண வேண்டும். அந்தச் சமையல்கலை தெரியாது கஸ்டப்பட்ட நிலையை உணர்த்திப்பாடியபோது சபையோரில் கணிசமான பெண்களின் கரஒலி, பெண்ணாக நடித்த அருட்கவியாருக்குப் புகழ்மாலையாயிற்று. இதில் வந்த இருவித பாடலையும் அருட்கவியாரே ஆக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றையதும் ஒரு முட்டை போட்ட முருகேசரின் நகைச்சுவையான கதை. எங்கள் ஊர்க்கோயிலில் அருட்கவி யாரின் கதாகாலட்சேபம் நடந்து கொண்டிருந்தது. அப்போது பிரசங்கத்தின் நடுவே நகைச்சுவையாக இதைச் சொன்னார். முருகேசரும், நல்லதம்பியும் நண்பர்கள். ஓய்வான நேரத்தில் நூல்நிலையத்தில் சந்தித்துப் பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்கள். அன்றொருநாள் முருகேசர் பெண்தான் இரகசியங்களை வெளிவிடாது காப்பாற்றுவாள் என்று சொல்ல நண்பர் நல்லதம்பி இதை மறுத்தார். இறுதியில் மேற்படி கூற்றை இருவரும் மறுநாள் நிரூபிக்க வேண்டும் என்று தீர்மானம். மறுநாள் காலையில் முருகேசர் தம் மனையாளிடம் வந்து தான் காலைக்கடன் செய்யும்போது வயிற்றில் இருந்து ஒரு முட்டை வெளியேறியதாய்ச் சொன்னார். இது விடயம் யாருக்கும் தெரிய வேண்டாம் என்றும் இரகசியமாய் வைத்திருக்கும்படியும் மனைவியிடம் உறுதியாய் சொல்லிவிட்டார். தன் வேலைகளை முடித்து வாசிகசாலைக்குப்போக ஆயத்தமானார். மனையாளும் அவர்களின் பங்குக்கிணற்றடிக்குத் தண்ணீர் எடுத்துவரப் போனார். பல பெண்கள் சேரும் இடம்தானே நீர் நிலைகள். அவர்களுடன் பேசும்போது இவரின் மனையாள் தன் கணவன் முட்டையிட்ட செய்தியை மிகமிக இரகசியமாகச் சொல்லி அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றும் வேண்டிக் கொண்டாள்.

இப்போ முருகேசர் நூல்நலையம் நோக்கிப் புறப்பட்டார். சுமார் நூறுவீடுகள் தெருவில் வாசல் அமைந்தனவாய் இருந்தது. தெருவில் இவர் நடந்து போகும்போது வழமைக்கு மாறாகப் பலவீடுகளின் வாசல்பக்கம் பெண்கள் நின்று வேடிக்கை பார்ப்பது போல் நின்றார்கள். முருகேசர் சிறிதுதூரம் போனவுடன் ஒரு சிறுவன் வெளியே ஓடிவந்து ‘டேய் வாருங்கோடா இதோ முட்டைபோட்ட முருகேசர் போறார்’ என்று சத்தமிட பல சிறுவர்கள் வந்து அப்படியே கோசமிட்டார்கள். இவை எல்லாவற்றையும் தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசர், நேற்றுவிட்ட சவாலில் தோல்வியைச் சுமந்து கொண்டு வாசிகசாலையை அடைந்தார். அங்கே நல்லதம்பியார் இவரின் வருகைக்குக் காத்திருந்தார். பெண்களின் இழகிய தன்மையைப் புரிந்துகொண்டார்கள் என்று அருட்கவியார் நயம் பட உரைத்த செய்தி என்றும் உண்மை என்று கண்டோம்.

இன்னும் தான் படித்த பாடசாலைக்கும் பின் ஆசிரியராகப் பணிசெய்த கல்லூரிக்கும் இவர் ஆற்றிய இயல்இசை நாடகப்பணிகள் பல.

உழவுக்கும் தொழிலுக்கும் சிறந்து விளங்கும் எங்கள் கிராமத்து மக்களின் வாய்மொழியாக இரு பாடலை அமைத்து அதில் இயலையும் இசையையும் நாடகத்தையும் புகுத்திப் பள்ளி மாணவர்கள் மூலம் செயற்படுத்தி அரங்கேற்றி பள்ளிக்கூடத்திற்கும் ஊருக்கும் புகழ்தேடித்தந்தார். அப்பாடல் அன்றைய நாட்களில், யாழ்/இணுவில் காளிங்கன் திரை அரங்கில் இப்பள்ளுப்பாடலுடன் கூடிய நடனநாடகம் மனக்கண் முன் வருகிறது. 'தென்னாதெந்தன தென்னாதெந்தன தென்னா தெந்தனதென்னானே, கறுத்தப்பள்ளியும் சிவத்தப்பள்ளியும் கலந்து நாற்று நடுகையில் கறுத்தப்பள்ளி எறிந்த நாத்துக் கமலகுண்டலம் விழுந்ததாம். இப்படி போகிறது இப்பாடல். இப்பாடல் மூலம் கேட்போரையும் பார்ப்போரையும், நாற்று நடும் வயல்வெளிக்கு இட்டுச் செல்கிறார் எங்கள் அருட்கவி.

பெரிது பெரிது அருட்கவியின் வாழ்வு. இவர்போல் நல்ல பண்பாளரைக் காண்பது அரிது அரிது என்றாலும் இனிது இனிது என்று மகிழும் படி அவர் வாழ்ந்த இனிய காலத்தில் நாங்களும் வாழ்ந்தோம் என்ற மனநிறைவுடன் விடைபெறுவோமா!

- முற்றும் -

---

52ஆம் பக்கத் தொடர்ச்சி

மகளிர் திரௌபதிக்கு கிருஷ்ண பரமாத்மா அருளி வழங்கியது போல சேலை வகைகளோடும் காட்சி கொடுத்து சிவதர்மங் களையும், ஆச்சிரம தர்மங்களோடு இணைந்த கர்மாக்களையும் சைவக் கலாச்சாரங்களையும் முன்னெடுப்பின் நாமும் இறையருள் பெற்று அருமையான சிவபூமியாக எமது இந்தப் பூமியை வளர்த்து நாமிருக்கும் நாடு நமதே என்ற பாரதியாரது வேதவாக்கிற்கமைய வாழ முடியும்.

அவ்வாறு வாழவே நாமனைவரும் சங்கற்பிப்போமாக!






ஸ்காபரோ நகரில் உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அறுசுவை உணவு வழங்குபவர்கள்

**நியூ தேவி உணவகம்**

**இலங்கை, இந்திய உணவு வகைகளிற் கை தேர்ந்த நிபுணர்கள்**

தினமும் இடியப்பம் (வெள்ளை, சிவப்பு), பிட்டு, இட்லி, தோசை, வடை, வாய்ப்பன், மோதகம், பற்றிஸ் மற்றும் பல்வேறு உணவுகளை காலை 9:00 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை சுடச்சுட பெற்றுக்கொள்ளலாம்

விரத நாட்களில் விசேட மரக்கறிகளுடன் வடை பாயாசமும் பரிமாறப்படும்

**1877 Lawrence Ave. East, Scarborough, ON**
**(Lawrence & Pharmacy)**
**Tel: 416-288-0303**

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**
**டாக்டர் அ. சண்முகவடிவேல்**
**Orthodontics Implants**
பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்
**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)
**416-266-5161**
**MAIN SQUARE DENTAL OFFICE**
**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)
Dr. Yao San Other days)
**416-690-0121**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்து யாத்திரை (தொடர்)
# 4. பயணம்

பயண நாளன்று மகன் தனது வாகனத்தில் எங்களைக் கொண்டு சென்று உரிய நேரத்துக்கு ரொறன்ரோ விமான நிலையத்தில் இறக்கினான். பொதிகளைத் தூக்குவதும் வைப்பதும் எல்லாம் அவனது வேலைதான். உள்ளே செல்லமுன் தாயார் மகனைத் தழுவி முத்தம் கொடுத்தார். தாய்மைக்கு அப்படி ஒரு பாசம் எப்பொழுதுமேயுண்டு.

விமானம் சொன்ன நேரத்துக்கே, அதாவது 18:20க்கே அசையத் தொடங்கிவிட்டது. நான் எனது குலதெய்வத்தை அழைத்தேன்:

அரனார் மகனே ஆனை முகனே
ஞானப் பெருஞ் செல்வா
திருவார் உருவே திகழும் நிலவே
தேனின் னமுதோனே
அரிதோ எளிதோ எதுவோ அனைத்துச்
செயற்கும் முதல்வோனே
பெருவாழ் வடியார் புடைசூழ் கோலங்
கரைகொள் பெருமானே.

விநாயகப் பெருமான் எங்கும் இருக்கின்றார். எங்கள் உள்ளங்களிலும் இருக்கின்றார். இருந்தால் போதுமா? இருக்கின்றவரை எழுப்ப வேண்டாமா? எழுந்தருளச் செய்யத்தானே வழிபாடும் பூசையும். இப்படிப்பட்ட நேரங்களில் எனது ஊர்ப் பிள்ளையாரின் திருவிடமாகிய கோலங்கரைக்கு (கொல்லங்கிராய்க்கு) நான் ஒருகாற் போய்வருவ துண்டு. விமானம் ஏறும்பொழுது மட்டுமல்லாது இறங்கும் பொழுதும் அவரை நினைப்பேன், எனக்காகவும் என்னோடு பயணஞ் செய்பவருக்காவும். அப்படி ஒரு பழக்கம்.

எமது இருக்கையைத் தேடி இரவுணவு வந்தது. மற்றவர்களுக்கு வழங்க முன்பே வந்து விட்டது. வேறு சிலருக்கும் அவ்விதம் வழங்கப்பட்டன. சைவ உணவு, மற்றும் வேறுபட்ட உணவுகளைக் குறிப்பிட்டுக் கேட்டவர்களுக்கு இப்படி முன்னதாக வழங்கும் முறையை விமானக் கம்பனிகள் பின்பற்றி வருகின்றன. ஏனென்று தெரியவில்லை. விநியோக வசதிக்காகத்தான் என்று நினைக்கின்றேன். எதற்காகவென்றாலும் மற்றவர்கள் பார்த்துக்





கொண்டிருக்க எப்படிச் சாப்பிடுவது? இவ்விதம் உணவைப் பெற்றுக் கொண்டவர்கள் நினைத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் உணவு கிடைத்ததும் உட்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். நாளைக் காலை அமஸ்ரடாமை அடைந்ததும் நான் ஆரோ நீ ஆரோ! அதற்கிடையில் என்ன பண்பாடு? சாப்பிடச் சொல்லித்தானே தந்திருக்கிறார்கள். சூடாறிப் போகும் என்று மனைவியார் கூற, இருவருமாகப் பசியாறத் தொடங்கினோம். Air Transat உபசரிப்புப் பரவாயில்லை.

கைப் பையிலிருந்து ‘குருவழிபாடு’ என்ற நூலை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். தூக்கம் வந்தது. நான் எழுதிய புத்தகத்தை நானே படித்தால் தூக்கம் வராதா, என்ன? அதனை வைக்கப்போக மனைவியார் கையை நீட்டினார். அவரிடம் அதைக் கொடுத்து விட்டுச் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் உரை எழுதிய திருவருட்பயனை எடுத்தேன். முன்பு உடனே வந்த தூக்கம் இப்பொழுது கொஞ்ச நேரம் கழித்து வந்தது.

எத்தனையோ பேருக்குத் தூங்கமுடியாத வருத்தம். எனக்கு அது தானாக வருகிறது. தானாக வருவதைத் தட்டிக் கழிக்கக் கூடாது என்று இருக்கையைச் சற்றுப் பின்னாகச் சரித்துச் சாய்ந்து விட்டேன். நான் தூங்குவதைப் பொறுக்காத குழந்தை ஒன்று கீச்சிட்டுக் குளறி என்னை எழுப்பிவிட்டது. அது நித்திரைக்குத்தான் அழுகுது - இது அனுபவம் மிக்க எனது மனைவியின் தீர்ப்பு. திரும்பவும் ஒருக்கால் கண் விழித்தபோது தொலைக் காட்சியில் சிரிப்பு நடிகர் ஒருவர் எங்களுக்கு முன்னால் இருந்த சில இளவட்டங் களுக்குச் சீனவெடிச் சிரிப்புகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். இப்படியே விட்டு விட்டுத் தூங்கி வளிந்தேன்.

பயணிகள் தூங்கினாலும் விமானம் தூங்கவில்லை. நேரம் எப்படிப் போனதென்றே தெரிய வில்லை.

காலை உணவைப் பரிமாறினார்கள். விமானத்துள் சலசலப்புகள் அதிகமாயின. அறிவிப்புக்களும் தொடர்ந்தன. விமானம் இறங்கப்போகிறதாம்.

ஈர அன்புடன் இரந்த தேவரின்
இடர்கள் போக்கிய இணையி லாதமா
வீர விநாயகர் வெற்றி விநாயகர்
வில்லங் கங்களோர் சிறிது மின்றியே
தூர உணர்வினைத் துரத்தித் தூயதன்
தும்பிக் கையினால் தூக்கி எங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர வேண்டிய இடத்திற் சேர்த்தவான்
செல்வ விநாயகர் தாள்கள் வாழ்கவே.

விமானம் உரிய நேரத்துக்கு அமஸ்ரடாமில் தரை தட்டியது. பயணிகள் கை தட்டினார்கள். அதில் பாதுகாப்பாக வந்து இறங்கிய மகிழ்ச்சி மட்டுமன்றி, பாதுகாப்பாக விமானத்தைச் செலுத்திக் கொண்டுவந்து இறக்கிய விமான ஓட்டுநருக்கான நன்றி யுணர்வும் கலந்திருந்ததை உணர முடிந்தது.

## மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயில் மகா கும்பாபிடேகப் பெருவிழா



மொன்றியல் மாநகரத்தின் கண்ணே எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமானுக்கு ஆலய நிருவாக குவிபெக்குச் சைவ மகா சபை சொந்தமாகக் காணி வாங்கி அத் திருவிடத்தில் இராச கோபுரத்தோடு கூடிய புதுக் கோயில் அமைத்து 22-06-2006 திங்கள் முதல் விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், கணபதி ஓமம் ஆகியவற்றுடன் தொடங்கி முறையா கிரியைகளை நடத்தி 28-06-2006 ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிடேகப் பெருவிழா முருகப் பெருமானின் திருவருளால் நிறைவேறியுள்ளது. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட அடியார்கள் இவ் வரலாற்றுத் திருநாளில் புதிய ஆலய தரிசனஞ் செய்து புனிதர்களாயினர்.





# ST.THIRUNAVUKARASAR

**Seeniappah Rajaratnam**

## SERVANT OF GOD

He said "EN KADEN PANISEITHU KIDAPATHEY." Service to God is my worship. In one of his verse he said that 'my duty is service to Lord Siva, and Gods duty is to support me'.

He was born in Thirumunaipady in Thiruvamur. He was the son of Pugalanar and Mathiniyar. His parents died while he was young. He lost his sister's would be husband, who was proposed in marriage by his parents, he died in battle. His sister Thilagavathry preferred death. At the request of Thirunavukarasar she continued to live as his guardian. He became a learned person, he was very much attracted by Samanar who converted him to their religion, and his sister was very much disappointed at his decision. Having experienced suffering in his early years he preferred to remain unmarried. The pallava king honored him with the title Tharmasena since he was a scholar. Soon after he suffered from an illness. His sister prayed hard for his return. In the mean time the disease called 'Soolai' running high temperature caught her brother. Finding no way he decided to return to his sister. Thilagavathy took him to the temple uttering the name of god 'NAMASIVAYA' and applied the holy ash Thiruneeru over his body which miraculously healed him.

**A turning point in the life of St Appar**

Now he changed his mind and again embraced Saivasem. This provoked the followers of the Samanar religion and they informed the king and wanted him to be punished. The king ordered him to be tortured. The officers threw him in a room full of burning fire. He came out successfully unhurt with a blissful song 'Masile veensayum maali mathiyamum veesu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

thentralum'. It is difficult to convey the sweetness of this song in any other language; he came out of it and said it was cool as a swimming pool, as he took cover under Lord Siva.

Next he was given poison to drink. This did not kill him, later he was trembled by an elephant, but he was safe, at last he was tied to a large rock and thrown into the sea. He sang 'katunai pooddiyor kadalil pachinum natunai avathu Namachivayavei' and he floated,

He was born at a time of darkness and turbulence. He awakened the people from the delusion of attachment for the things of the flesh to love of God. In a temple called Vetharaneswarer the door was kept closed to the public by the power of veda mantra by the priest. St Sambanther requested Appar to sing a song to open the door and the door opened. St Navukarasar requested St Sambanther to sing a hymn to a close the door and it was closed. This proves Tamil songs had the power of Vedas to do miracles.

Describing God in his verse he says God is hidden like fire in the wood, like ghee in the milk, like the sounds in the bell. If God can be realized within, one must see God everywhere . He saw vision of God in human form, described the curved eyebrow of Lord Siva, reddish lips, his smile, the locked up hairs on his head, crystal like body, milky holy ash, and said that God realization was by human birth alone.

Traditionally the poets worship God, as male and female devotee an attitude of surrender. In the verse 'MUNAM AVALUDAYA NAMAM' the bride is inquiring the name of the would be husband about his appearance, further about his place of birth, she becomes mad of him, forgets herself, forgets her individuality, and decides to surrender to her Lord.

**Two way relationship to God**

In Tamil bakthy songs we find a two way relation to God, a kind of bargaining. When St Thirunavukarasar suffered





from Soolainoi, he prayed that he did no cruelty to anyone, and he would pray day and night to Lord Siva. He pleaded that he would place God in his heart and remember him always. He worshiped God with water, flowers and incense. He always sang Padigams (hymns) in Tamil to please Lord Siva. In good as well bad times he constantly worshiped God and repeated the name of Lord Siva, and begged Siva to heal his suffering.

God is an invisible immediate help in our trying situation, he says. He worshipped God in the womb, and after birth, he learnt the name (name) of the Lord, and with Gods grace, told the mantra Sivaya nama, and wore the holy ash Thiruneeru, in return he requested Lord Siva to bless him with Sivakathy the abode of God.

**Ways to worship Siva in temples**

The quality of devotee should be constant remembrance of God that brings highest good. One should rise up early in the morning decorate God with water flowers, incense, and garlands, and sing the glory of God, bow down his head and praise daily for the blessings to make everyday worth living

He was called as Alludia Arasu. He had a sliver tongue for words and Lord Siva called him Navukarasu. He practised purity in thought word and deed. He strove hard for God realization achieved it. All his life incidents should be interpreted in that light. He was never tired of mentioning his experiences. He had a steady fast love of God.

In one of his Thevarams 'Namasivaya' he gives us a vivid picture of the power of this mantra. In another verse he sums up its all wisdom and knowledge of skills, by repeating the name of the Lord, by your tongue it will guide and light your path in darkness.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

## திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

1. பிரம்மேந்திர சரஸ்வதி சுவாமிகள் தென்இந்தியாவில் சேந்தமங்கலம் என்ற இடத்தில் ஒரு ஆலமரத்தின் பரமயோகியாய் தியானத்தில் அமர்ந்திருந்தார். சில அரக்கத்தனமுள்ள கொடியவர்கள் கல்லால் எறிந்து சுவாமிகளுடைய தொண்டையிற் காயம் ஏற்படுத்தினர். இவர்கள் கலவரத்தின்பொழுது கல்லால் அடிபட்டு இறந்தனர். இந்தச் சம்பவத்தின் பின்பு சுவாமிகள் மீது யாவருக்கும் பக்தி மேலோங்கியது. இது தான் பயபக்தி போலும்.

2. சுவாமிகள் சேந்தமங்கலம் குகையில் நிட்டையில் அமர்ந்திருக்கையில் ஒரு பெரிய சர்ப்பம் சுவாமிகளைச் சூழ்ந்து மண்டலமிட்டபடி படுத்து முன்னே தலைதூக்கிப் படமெடுத்துக் கொண்டிருந்தது. இதைக்கண்ட சுவாமிகளின் பக்தர்கள் செய்வதறியாது திகைத்தனர். சுவாமிகள் சிறிது அஞ்சாமல் புன்முறுவலுடன் சர்ப்பமே உன்வழியே செல் எனக் கட்டளை யிட்டார். எல்லோரும் வியப்புறும்படி அது சென்று மறைந்தது.

3. கதிர்காமத்திற்குப் பக்கத்தில் உள்ள கிரி விகாரை கட்டப்படு வதற்கு முன்பு அந்த இடம் சூரன் கோட்டை என்று அழைக்கப் பட்டது. இலங்கை சூரனுடைய ஆட்சிக்குட் பட்டிருந்தது என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சியாகும்.

4. அழியாவரந்தரும் ஆறுமுகப் பெருமானின் அற்புதத் திருவிளை யாடல்கள் இன்றும் நடைபெறும் திவ்விய சேத்திரம் கதிர்காமம் ஆகும். இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய மூவகைச் சமயத்தவரையும் ஒன்றுபடுத்தும் இடம் கதிர்காமம் ஆகும். கதிர்காமத்தில் சமரசவழிபாடே நடைபெற்று வந்துள்ளது. அந்தக் காலத்தில் அரசனும் சாமிதான், ஆண்டியும் சாமிதான். கதிர்காமத்தில் அரோகரா என்னும் வார்த்தைக்கு இருக்கும் வலிமை வேறு எந்த முருக தலத்திலும் நாம் காணமுடியாது.

5. கதிர்காமத் தலத்திலிருந்து மூன்றுமைல் தூரத்தில் விபூதிமலை என்ற பெயருடன் ஒருமலை உண்டு. அங்கு பெறப்படும் விபூதியே கதிர்காம விபூதியாகும். நிலத்தில் இருந்து பெறப்படும் விபூதி கதிர்காமத்தைத் தவிர உலகின் வேறு எந்த இடத்திலும் காணமுடியாது.





6. கருணை வேறு ஞானம் வேறு என்று சிலர் சொல்லுகிறார்கள். அக்கூற்று பிழையானது. ஞானத்தின் பயன் தான் கருணை. பிறரது துயரைத் தன் துயரமாக எண்ணி இரங்குவது தான் நல்லறிவுக்குரிய இலக்கணமாகும். அந்த நல்லறிவே ஞானம் எனப்படும்.

7. சைவசமய மரபிலே வந்த ஒவ்வொருவரும் சைவசமய ஒழுக்கத்தை கடைப்பிடித்து இறைவழிபாட்டில் நிற்றல் வேண்டும். உடையால், உடலால், உள்ளத்தால், நடையால் உணவால் எல்லாம் சைவ ஒழுக்கம் மிளிர வேண்டும்.

8. இறைவழிபாட்டில் தேவாரம், திருவாசகம் முதலிய தோத்திரப்பாடல்களைச் சொல்லி துதித்து வழிபட்டால் மனம் பண்பட்டு இறையருளைப் பெற வழிவகுக்கும்.

9. திருவாசகத்திற்கு உரை எழுதிய போப் பாதிரியார் தமிழர்களின் பேரறிவின் பயன் சைவசித்தாந்தக் கொள்கை எனக் குறிப் பிட்டுள்ளனர். அத்துடன் இந்தியாவின் சமயக் கொள்கைகள் எல்லாவற்றிலும் சைவசித்தாந்தக் கொள்கையே சிறப்புடையது எனக் குறிப்பிட்டுள்ளார்.

10. எந்தச் சமயத்தில் ஒருவர் பிறந்தாரோ அந்தச் சமய ஒழுக்கத்தைப் பின்பற்றிச் சாதனைகளைச் செய்தால்தான் விருப்பு வெறுப்புக்கள் தேய்ந்து ஆன்ம முன்னேற்றம் அடைய முடியும். வேற்று சமயத்தில் புகுந்தால் குறிப்பிட்டவர்களின் மனத்திலுள்ள பூர்வவாசனைகளும் பிள்ளைப் பருவத்தில் பெற்றோர்களால் ஊட்டப்பட்ட வாசனைகளும் கிளர்ந்தெழுந்து சாதனையில் முன்னேற முடியாமல் தடைசெய்யும்.

11. நாங்கள் சமயத்தின் பெருமைகளப் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர மக்களைச் சமய வாழ்க்கை நடத்துமாறு தூண்டத் தவறிவிட்டோம். சமயம் உதட்டளவிலே தான் உண்டு. உள்ளத்திலே சமயவாழ்க்கை ஓடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org